ஜெர்மனியிலுள்ள பைத்துல் கபீர் பள்ளிவாயில் திறப்பு விழாவில் விருந்தினர்களுக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் ஆற்றிய உரை பக்கம் 3

மார்க்க அறிவுப் புத்தகம் (தொடர்-14) பக்கம் 8

இஸ்லாமிய பர்தா பக்கம் 13

இஸ்லாம் முன்வைக்கும் தூய ஓரிறைக் கொள்கை பக்கம் 17

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | January 2024 | Vol. 3 - Issue No. 2

Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311

## பைத்துல் கபீர் பள்ளிவாசல்
## ஜெர்மனி





# திருக்குர்ஆன்

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا ٱتَّقُوا ٱللَّهَ وَلْتَنظُرْ
نَفْسٌ مَّا قَدَّمَتْ لِغَدٍ ۖ وَٱتَّقُوا ٱللَّهَ ۚ
إِنَّ ٱللَّهَ خَبِيرٌۢ بِمَا تَعْمَلُونَ ١٩

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஒவ்வொரு ஆன்மாவும் நாளைக்கென்று எதனை அனுப்பியுள்ளது என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும். மேலும் நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறி –கின்றான். (59:19)



# ஹதீஸ்

عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ
عَلَيْهِ وَسَلَّمَ اغْتَنِمْ خَمْسًا قَبْلَ خَمْسٍ شَبَابَكَ قَبْلَ
هَرَمِكَ وَصِحَّتَكَ قَبْلَ سَقَمِكَ وَغِنَاكَ قَبْلَ فَقْرِكَ
وَفَرَاغَكَ قَبْلَ شُغُلِكَ وَحَيَاتَكَ قَبْلَ مَوْتِكَ
شعب الإيمان للبيهقي 10248

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஐந்திற்கு முன் ஐந்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் முதுமைக்கு முன் உங்கள் இளமை; உங்கள் நோய்க்கு முன் உங்கள் ஆரோக்கியம்; உங்கள் வறுமைக்கு முன் உங்கள் செல்வங்கள்; உங்கள் வேலைக்கு முன் உங்கள் ஓய்வு நேரம் மற்றும் உங்கள் மரணத்திற்கு முன் உங்கள் வாழ்க்கை.” (ஷுஅப் அல் ஈமான் லில் பைஹக்கீ 10248)

## ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் 11.09.2023 அன்று ஜெர்மனியிலுள்ள பைத்துல் கபீர் பள்ளிவாசலைத் திறந்து வைத்த பிறகு சிறப்பு விருந்தினர்களுக்கு ஆற்றிய உரை






தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது

கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு

முதலில் நான் மேயர் சாஹிப், அவர்களுடைய கவுன்சில் மற்றும் நகர மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நகரில் பள்ளிவாசல் கட்டுவதற்கு நமக்கு நிலம் கிடைத்தது. பள்ளிவாசல் கட்டுமானப் பணியை முழுமை செய்வதற்கு அவர்கள் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளார்கள். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலியைத் தருவானாக என்று நான் பிரார்த்திக்கிறேன்.

இவ்வகையில் நானும் உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இங்குள்ள முழு ஜமாஅத்தும் உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. ஜெர்மனி அமீர் சாஹிப் அவர்கள் இந்நகரை அறிமுகப்படுத்தும்போது, இது பழங்காலத்து நகரம் என்று கூறினார்கள். இந்த வகையில் வரலாற்றுச் சிறப்புடைய நகரமாக இது உள்ளது. பழங்காலத்து நகருடைய மரபுகளையும் நாம் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். பழங்காலத்து நகரின் வரலாற்றையும் நாம் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். இதற்காக நம்மால் எந்த அளவு முடியுமோ அதை நாம் முறைப்படி செய்கிறோம். உள்ளூர் மக்களின் மரபுகளையும் நாம் மதிக்கின்றோம்.

இப்பகுதியில் பள்ளிவாசலை விட்டு வெளியே வரும் போதும் சரி, இங்கு முன்னால் உள்ள பகுதியிலும் சரி, வயல்வெளிகள் இருப்பதை நான் கண்டேன். நகரைச் சுற்றிலும் விவசாய நிலம் உள்ளது. விவசாயம், நீரைச் சார்ந்துள்ளது. நீர் இல்லை என்றால், மழை இல்லை என்றால், வறட்சி ஏற்பட்டு விடும். பயிர்கள் நாசமாகி விடும். இவ்வாறான நிலை தோன்றி விடுகிறது. இப்பொழுது ஐரோப்பாவில் கொஞ்சம் அதிக வெப்பம் இருந்தது. பல நாடுகளின் காடுகளில் தீப்பிடித்து விட்டது. அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் தீப்பிடிக்கிறது. இவ்வருடம் கனடாவிலும் மிக பரந்த அளவில் தீப்பிடித்தது. ஐரோப்பாவிலும் சில நாடுகளில் தீப்பிடித்தது. காலநிலை கொஞ்சம் மாறினாலும் பயிர்கள் விளைவதில் குறைவு ஏற்படுவது மட்டுமின்றி, ஏற்கனவே பசுமையாக இருக்கும் காடுகளும், பிற பகுதிகளும் பாதிக்கப்படுகின்றன; தீப்பிடித்து வீணாகி விடுகின்றன. ஆகவே, விவசாயத்திற்கு நீர் அவசியமாகும். அந்த நீர் வானத்திலிருந்து இறங்குகிறது.

அதே போன்று நாங்கள் நம்பக்கூடிய விஷயம் என்னவென்றால், இதே உதாரணம் மனிதனுடைய ஆன்மிக வாழ்விலும் உள்ளது. வானில் இருந்து நீர் இறங்கவில்லை என்றால், ஆன்மாக்கள் மரணித்து விடுகின்றன. ஆகவே அல்லாஹ் தனது இயற்கைச் சட்டமாக உருவாக்கி வைத்துள்ளது என்னவென்றால், எப்போதிருந்து இந்த உலகம் நிலைபெற்றுள்ளதோ அப்போதிருந்து அவ்வப்போது சமுதாயங்களில் நபிமார்களை அனுப்பி வருகின்றான்.

நமக்குத் தெரிந்த வரலாற்றில், நமது ஆதமுடைய வரலாறு நிலைபெற்றுள்ளது. அல்லாஹ்வின் சார்பாக நல்லடியார்கள் வருகிறார்கள். அவர்கள் ஆன்மிக நீரை நமக்கு கொண்டு சேர்க்கிறார்கள். அதன் காரணமாக சமுதாயங்களில் ஆன்மிக வாழ்வும் உருவாகி வருகின்றன. ஆன்மிகப் பயிர்களும் விளைந்து வருகின்றன. நாம் இதைத்தான் கண்டு வருகிறோம். இந்த வகையிலும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது வாழ்வின் குறிக்கோள் ஒன்று உள்ளது. நாம் உயிர் வாழ வேண்டுமென்றால் ஆன்மிகத்திற்காகவும் உயிர் வாழ வேண்டும். நம்மைப் படைத்த அல்லாஹ்வுடனான தொடர்பிலும் உயிர் வாழ

வேண்டும். 'என்னுடன் தொடர்பு வைக்க விரும்புகிறீர்கள் என்றால், எனது படைப்பினங்களுடனும் தொடர்பு வைக்க வேண்டும் அவர்களின் உரிமைகளையும் செலுத்துங்கள்' என்று நம்மைப் படைத்தவன் நமக்கு இதன் பக்கம் கவனமூட்டியுள்ளான்.

ஆகவே நாம் பள்ளிவாசல் கட்டுகிறோம் என்றால், இந்த நோக்கத்திற்காகக் கட்டுகிறோம். நாம் இறைவனை வணங்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அவனுடைய உரிமைகளைச் செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும் ஆன்மிக நீரிலிருந்து பயனடைவதற்காக துஆ செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் அடியார்களின் உரிமைகளையும் செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அடியார்களின் உரிமையைச் செலுத்த வேண்டியது ஏன் அவசியம் என்றால், அதைக் குறித்து திருக்குர்ஆனில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. நீங்கள் ஒருவர் மற்றவருடைய உரிமையைச் செலுத்தவில்லை என்றால், அடியார்களின் உரிமைகளைச் செலுத்தவில்லை என்றால், அனாதைகளின் உரிமைகளைச் செலுத்தவில்லை என்றால், தேவையுடையோரின் உரிமைகளைச் செலுத்தவில்லை என்றால், மார்க்கச் சுதந்திரத்தின் உரிமைகளை அபகரிப்பீர்கள் என்றால் அல்லது எந்த ஓர் உரிமைகளையும் நீங்கள் பறிப்பீர்கள் என்றால், உங்களுடைய தொழுகைகள்




உங்களுக்கே திருப்பி அனுப்பப்படும். அந்தத் தொழுகை-களுக்கு எந்தப் பயனும் இருக்காது. அவை அல்லாஹ்-விடத்தில் ஏற்றுக்கொள்ளப்படாது.

இந்தப் பள்ளிவாசலின் பெயர் மஸ்ஜிது கபீர் என்று வைக்கப்பட்டுள்ளது. இது அல்லாஹ்வின் பண்புப் பெயர்களில் ஒரு பெயராகும். அல்லாஹ் நமது எல்லா செயல்களையும் அறிந்தவனாக இருக்கின்றான். நாம் செய்யக்கூடிய இறை வணக்கங்கள், நாம் செய்யக்கூடிய செயல்கள் எந்த எண்ணத்தில் செய்யப்படுகின்றன என்பதை அவன் அறிகின்றான். அது அவனுடைய ஞானத்திலும் உள்ளது. அந்தச் செய்தியை அவன் அறிந்தவனாகவும் இருக்கின்றான். அதனுடைய விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதையும் அவன் அறிந்துள்ளான். ஆகவே அல்லாஹ்வுடைய நேசம் கிடைக்க வேண்டும் அவனுடைய கட்டளைகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தில் நாங்கள் பணியாற்று-கின்றோம். நாம் அவனுடைய படைப்பினங்களின் உரிமை-களைச் செலுத்தும்போதுதான் இது சாத்தியம் ஆகும்.

விவசாயத்தை நான் உதாரணமாகக் கூறினேன். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: இருளில் நீங்கள் விதைகளைத் தூவுகிறீர்கள். அது முளைக்குமா முளைக்காதா என்று உங்களுக்குத் தெரியாது. ஆயிரக்கணக்கான விதைகள் தூவப்படுகின்றன. அவற்றில் சில சதவீத விதைகள் மட்டுமே முளைக்கின்றன. அதைக் கண்டு அதன் பொறுப்பாளி மகிழ்ச்சியடைகிறார்.

அல்லாஹ் கூறுகிறான்: மண்ணுக்குள் இருக்கும் இருளில் இருந்து எந்த தானியங்கள் முளைக்கும், எவை முளைக்காது என்று எனக்குத் தெரியும். எல்லாவற்றையும் பற்றிய ஞானம் எனக்குத்தான் உள்ளது. நான் எல்லாவற்றையும் அறிந்தவனாக இருக்கிறேன். இதற்குப் பிறகு என்ன விளைவுகள் ஏற்படும் என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே என்னுடைய போதனையின் படியும் நீங்கள் செயல்படுங்கள் என்று நான் கூறுகிறேன். அதன் மூலமாக நானும் உங்களுக்கு எனது விருப்பத்தைப் பெறக்கூடியவர்-களுக்கு வழங்கும் அந்தக் கனிகளை வழங்குவேன்.

மார்க்க அமைப்பு என்ற அடிப்படையில் நமது மிகப்பெரும் பொறுப்பு என்னவென்றால், அல்லாஹ்வின் விருப்பத்தை நாம் பெற வேண்டும். 'என்னை வணங்குங்கள் என்னை வணங்குவதுடன் என் அடியார்களின் உரிமை-களையும் செலுத்துங்கள். அப்போது நீங்கள் விரும்புகின்ற அந்த விளைவுகளை நான் உங்களுக்கு வழங்குவேன்' என்று அல்லாஹ் கூறுகின்றான். அதன் மூலமாக உங்களுக்குப் பயன் கிடைக்கும். உங்களுடைய வாழ்வுக்கு ஆன்மிக அமைப்பை ஏற்படுத்திக் கொடுப்போம் (என்று கூறுகிறான்).

எனவே இந்த விஷயங்களுக்காகத்தான் நாங்கள் பள்ளிவாசல்களைக் கட்டுகிறோம். இது பற்றிய புரிதல் நம்மில் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டு விட்டால், நாம் அல்லாஹ்வை வணங்கக் கூடியவர்களாக இருக்கின்ற அதே வேளையில் அவனுடைய படைப்பினங்களின் உரிமைகளை முன்பை விட அதிகமாக செலுத்தக் கூடியவர்களாகவும் இருப்போம்.

இந்த சாலையின் பெயர் 'அமைதி சாலை' (Peace Street) என்று வைக்கப்பட்டுள்ளதாக அமீர் சாஹிப் கூறினார்கள். எனது பிரார்த்தனை என்னவென்றால், இந்த சாலை மட்டுமின்றி இந்த நகரின் ஒவ்வொரு சாலையும் அமைதியின் பக்கம் கொண்டு செல்லக்கூடிய சாலையாக அமையட்டும்! இந்த நகரில் வசிக்கக்கூடிய ஒவ்வொரு வீடும், அதில் வசிப்பவர்களின் சிந்தனைகளும் அமைதி, அன்பு, நேசம் ஆகியவற்றின் சிந்தனையாக ஆகட்டும்! உலகிற்கு இன்று இதன் தேவைதான் உள்ளது. ஆகவே ஒரு சாலை மட்டுமின்றி ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும், ஒவ்வொரு நகரத்திற்கும், ஒவ்வொரு நாட்டுக்கும் அமைதியின் தேவை உள்ளது. இதுதான் எனது பிரார்த்தனையாகும். அல்லாஹ் இந்த அமைதியை எப்பொழுதும் நிலைபெறச் செய்வானாக!

பிறகு Provincial Parliament உடைய Vice President அவர்களும் வந்துள்ளார்கள். அவர்கள் மார்க்கங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் பற்றி குறிப்பிட்டார்கள். இது மிகவும் அவசியமான விஷயமாகும். நாங்கள் எல்லா மார்க்கங்களையும் மதிக்கின்றோம். அஹ்மதிய்யா

ஜமாஅத்தின் தோற்றுனர் தம்முடைய காலத்தில் ஒரு மாநாட்டில் தமது கட்டுரையை வாசித்தார்கள். அந்த மாநாட்டில் எல்லா மார்க்கத்தினர்களும் இருந்தார்கள். எல்லா மார்க்கத்தினர்களும் தமது கட்டுரைகளை வாசித்தார்கள். “நீங்கள் சர்வ சமய மாநாடு நடத்த விரும்புகிறீர்கள் என்றால், ஒவ்வொருவரும் தம் மார்க்க சிறப்புகளை எடுத்துக் கூறலாம்தான்! ஆனால் மற்ற மார்க்கத்தைக் குறை கூறக் கூடாது. அப்பொழுதுதான் உலகில் அமைதி, சமாதானம், அன்பு ஆகியவை நிலைபெற முடியும். இதுவன்றி சாத்தியமில்லை” என்று அவர்கள் நிபந்தனை வகுத்தார்கள். நம் மார்க்க சிறப்புகளைக் கூறுவதற்கு நமக்கு உரிமை உள்ளதென்றால், அதே வேளையில் பிற மார்க்கத்தின் குறைகளைக் கூறுவதற்கோ, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கோ நமக்கு உரிமை கிடையாது. பள்ளிவாசல்கள் இதற்கான வழிவகைகளாக உள்ளன.

அறிவிப்புகளில் வருகிறது: இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் நஜ்ரானிலிருந்து ஒரு கிறிஸ்தவ குழு அவர்களை சந்திக்க வந்தது. நபவி பள்ளிவாசலுக்குள் பேசிக் கொண்டிருக்கும்போது கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவர்களிடத்தில் நிம்மதியின்மை ஏற்பட்டது. நீங்கள் ஏன் நிம்மதி இழந்து காணப்படுகிறீர்கள்! என்ன விஷயம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். இது எங்களுடைய இறை வணக்கத்திற்குரிய நேரம் ஆகும். நாங்களோ உங்களுடைய பள்ளிவாசலில் அமர்ந்திருக்கிறோம். எங்கு இறைவணக்கம் செய்வது என்பது எங்களுக்குப் புரியவில்லை என்றார்கள். “நாம் அனைவரும் ஏக இறைவனை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றோம்” என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

வேதம் கொடுக்கப்பட்டோருடன், உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் ஒன்றுபட்ட விஷயமாகிய அல்லாஹ்வைக் குறித்த விஷயத்தின் பக்கம் நீங்கள் வாருங்கள். கருத்து வேறுபாடுகளை விட்டு விடுங்கள் என்று திருக்குர்ஆனிலும் இதுதான் கூறப்பட்டுள்ளது. அப்பொழுது தான் சர்வ சமய கலந்துரையாடல் வெற்றி பெறுகிறது. அந்த இறைவன் பக்கம் வரும்போது, வெறுப்புகள் அகன்று விடுகின்றன.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களைப் பார்த்து, நீங்கள் நிம்மதி இழக்க வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் நபவி பள்ளிவாசலில் இருக்கிறீர்கள். இங்கேயே நீங்கள் இறைவணக்கம் செய்து கொள்ளுங்கள். அனைவரும் ஓர் இறைவனை வணங்கக் கூடியவர்கள். இங்கேயே இறைவணக்கம் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஆகவே அவர்கள் அங்கு இறைவணக்கம் செய்தார்கள். இவ்வாறு நஜ்ரானுடைய கிறிஸ்தவர்களுக்கும் தம் பள்ளிவாசலில் இறைவணக்கம் செய்ய அனுமதி அளித்தார்கள்.

மேயர் சாஹிப் கூறினார்கள். மேயர் சாஹிப்தான் கூறினார்கள் என்று நினைக்கிறேன். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இதே நாளில் Church-ம் திறக்கப்பட்டது. அது திங்கள் கிழமையாக இருந்தது. இன்றும் திங்கட்கிழமையாக இருக்கிறது. இன்று பள்ளிவாசல் திறக்கப்படுகிறது என்று கூறினார்கள். தற்செயலாக நிகழ்ந்த இந்த சம்பவமும், நாம் ஒன்றிணைந்து வாழ வேண்டும் என்றும், ஒரு மார்க்கத்தை ஏற்றுக் கொண்டவர்கள் இன்னொரு மார்க்கத்தை அவமதிக்க வேண்டாம். பரஸ்பரம் அன்பு நேசத்தோடு வாழ வேண்டும் என்றும் நமக்கு இதன் பக்கம் கவனமூட்டுகிறது.

இதற்கு முந்தைய மேயரைப் பற்றியும் கூறினார்கள். நான் இவர் மூலமாக அவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் சிறப்பாக ஒத்துழைப்பு




கொடுத்தார்கள். இவர்கள் பள்ளிவாசல் கட்டுவதற்கு அனுமதி கொடுத்தார்கள். இவர்களுக்கும் நான் ஏற்கனவே நன்றி கூறி விட்டேன். Peace Street பெயர் பற்றியும் கூறப்பட்டது. அது பற்றியும் நான் கூறிவிட்டேன். பாகிஸ்தானிய அஹ்மதிகள் தொடர்பாக இவர்கள் தம் மன உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். அதற்கும் நான் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். எவர்களுடைய மார்க்க சுதந்திரம் பறிக்கப்படுகிறதோ, மார்க்க மரபுகளின் படி மார்க்கப் போதனைகளின் படி செயல்படுவதற்கு எவர்களுக்கு அனுமதி இல்லையோ அவர்களை இந்த நாட்டில், தம் நகரத்தில் குடியிருக்கச் செய்துள்ளார்கள். அவர்களுக்கு இடம் வழங்கியுள்ளார்கள்.

உண்மையிலேயே இவர்கள் பரந்த மனப்பான்மை உடையவர்கள் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. மார்க்க சுதந்திரம் பற்றி இவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் என்பது தெரிய வருகிறது. நாட்டின் சட்ட திட்டங்களை மதிப்பதை பொருத்தவரை, நாங்களோ எல்லா நாட்டின் சட்ட திட்டங்களையும் மதிக்கக் கூடியவர்களாக இருக்கின்றோம். அன்பு நேசத்தைப் பரப்பக்கூடியவர்களாக இருக்கின்றோம். “நாட்டை நேசிப்பது ஈமானுடைய ஒரு பகுதியாகும்” என்ற ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலின்படி செயல்படக் கூடியவர்களாக இருக்கின்றோம். நாட்டுக்குத் தொண்டாற்றுவது, மனித குலத்தின் கண்ணியத்தை நிலை நாட்டுவது ஆகியவை எங்களது பணியாகும். நேசத்தின் சூழலை உருவாக்குவது, நேசத்தை வெளிப்படுத்துவது

ஆகியவை குறித்து மேயர் சாஹிப் அவர்கள் தம் கருத்தை வெளிப்படுத்தினார்கள். ஆகவே இந்த வகையில் எனது பிரார்த்தனையும் என்னவென்றால், அந்த நேசம் எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும். இந்த சிறுநகரில் நாம் அன்பு நேசத்தோடு வாழ வேண்டும்.

இந்த நகரத்தின் Integration பிரதிநிதியான ஹலீமா சாஹிபா அவர்களும் வருகை தந்துள்ளார்கள். அல்லாஹ்வின் அருளால் அவர் முஸ்லிமாவார். சமுதாயங்களை ஒருங்கிணைப்பு செய்வது குறித்து அவர் தம் கருத்தை வெளிப்படுத்தினார். இந்த விஷயம்தான் ஒரு சமூகத்தில் அன்பு நேசத்தை உருவாக்க முடியும். நாம் எவ்வாறு மற்ற சமுதாயங்களுக்கு கண்ணியமளிக்க வேண்டும் என்பதைப் பற்றி நான் முன்பும் கூறியிருக்கிறேன்.

நாட்டை நேசிப்பது எதிர்பார்ப்பது என்னவென்றால் - நான் முன்பும் கூறி இருக்கின்றேன் இது புதிதான ஒரு விஷயமல்ல! ஒவ்வொருவருக்கும் தமது கருத்து இருக்கும்! எனக்கு முன்பு பேசிய மேயர் சாஹிப் அவர்களும் தம் கருத்தை வெளிப்படுத்தினார்கள். Integration உடைய பிரதிநிதியும் தம் கருத்தை வெளிப்படுத்தினார்கள். ஒவ்வொரு -வருக்கும் தத்தமது அடிப்படை விஷயங்கள் உள்ளன. சட்டதிட்டங்கள் உள்ளன. மரபுகள் உள்ளன. அதற்கேற்ப அவர்கள் செயல்படுகிறார்கள். எங்களைப் பொறுத்தவரை Integration என்பதன் பொருள் இதுவல்ல! ஆனால் நாட்டை நேசிப்பது என்ற கேள்வி வரும் போது, நாட்டுக்குத் தொண்டு செய்வதில் நாம் அனைவரும் ஒன்று. நான் எப்பொழுதும் கூறுவது என்னவென்றால் என்னைப் பொறுத்தவரை Integration என்பதன் பொருள் என்னவென்றால், நாட்டை நேசிப்பது என்பதன் பொருள், நாட்டிற்காகத் தொண்டாற்றுவது ஆகும். அதன் முன்னேற்றத்திற்காக முயற்சிப்பது ஆகும். அந்த நாட்டில் அமைதி சகோதரத்துவம் ஆகியவற்றின் சூழலை உருவாக்குவதற்கு முயற்சி செய்வதாகும். எதிரி யாராவது தாக்குதல் தொடுக்கிறான் என்றால், அதைத் தடுத்து நிறுத்துவதற்காக எல்லாரையும் விட முன்னால் வருவது ஆகும். அஹ்மதிகள் நாட்டின் பாதுகாப்பிற்காக எப்பொழுதும் முன்னணியில் நிற்கிறார்கள். இதுதான் Integration என்பதாகும். Integration என்பது, கண்டிப்பாக கிளப்களுக்கு செல்ல வேண்டும் என்பதோ, மது அருந்த வேண்டும் என்பதோ அல்லது வேறு ஏதாவது செய்வதோ கிடையாது. இது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வழக்கங்கள் ஆகும். யாருக்கு இது தவறாக தெரியவில்லையோ அவர் செய்து கொள்ளட்டும்! ஆனால் எங்களுடைய போதனைகளுக்கு ஏற்ப





நாங்கள் செயல்படவில்லை என்றால், அதன் பொருள் நாங்கள் எங்களது மார்க்க போதனையை விட்டு விலகிச் செல்கிறோம் என்பதாகும். மார்க்க போதனை மிக அவசியமான ஒன்றாகும். நாட்டை நேசிக்கவும் வேண்டும் நாட்டு மக்களுக்காக முழுமையான முறையில் உழைக்கவும் வேண்டும் அவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் கொடுக்க வேண்டும் எல்லாவித சண்டை சச்சரவுகளையும் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று எங்களை இதன் பக்கம் அழைத்துச் செல்வதே இந்த மார்க்க போதனைதான். "எந்த ஒரு சமுதாயத்தின் பகைமையும் உங்களை நீதியை விட்டு விலகச் செய்ய வேண்டாம்" என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. நீதியில் நிலைத்திருங்கள். இதுதான் இறையச்சம் ஆகும்.

ஆகவே நாங்களோ இந்தப் போதனைப்படி செயல்படக் கூடியவர்கள் ஆவோம். நாங்கள் எங்கு சென்றாலும் அன்பு நேசத்தின் தூதுச் செய்தியைதான் கொண்டு செல்கிறோம். அது வெறும் முழக்கம் மட்டும் கிடையாது! நீங்கள் ஆப்பிரிக்காவுக்குச் சென்று பாருங்கள்! முன்னேற்றமடைந்த நாடுகளுக்குச் சென்று பாருங்கள்! நாங்கள் அங்கு பல திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றோம். உடல் ஆரோக்கியம், கல்வி, மாதிரி கிராமங்கள், தண்ணீர் விநியோகம் போன்ற பல திட்டங்கள் உள்ளன. எவ்வித மத இன பாகுபாடும் இன்றி எங்களுடைய குழு அங்கு பணியாற்றுகிறது. உலகில் நாங்கள் செய்யக்கூடிய பல்வேறு திட்டங்களின் மூலமாக பயனடையக் கூடியவர்களுள் 70, 80 சதவீத மக்கள் முஸ்லிமல்லாதவர்கள் ஆவர். இதுபற்றி நான் பொதுவாக கூறுவதும் உண்டு! எனவே நாங்கள் எல்லா இடங்களுக்கும் சென்று, நாட்டு மக்களுக்கு அதிகமான அளவில் தொண்டாற்ற வேண்டும் என்றே முயற்சி செய்கிறோம். இதன் மூலமாகத்தான் மனித குலத்தின் கண்ணியம் நிலைநாட்டப்படுகிறது. இதன் மூலமாகத்தான் நம்மை படைத்த இறைவன் நம் மீது திருப்தி கொள்கிறான். இதன் மூலமாகத்தான் அவன் நமக்கு வழங்குகின்றான்.

இத்துடன் கூடுதலாக இன்னொரு விஷயத்தையும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். Integration உடைய பிரதிநிதி பெண்மணி அவர்கள் கூறும்போது, இங்கு அமர்ந்திருப்பவர் -களில் பெண்கள் அதிகமாக இல்லையே அங்கு அதிகமாக இருந்தார்களே என்று கூறினார்கள். அவர்கள் அஹ்மதி

பெண்களை பற்றி கூறுகிறார்கள் என்றால், அஹ்மதி பெண்கள் அருகில் உள்ள ஹாலில் அமர்ந்திருக்கிறார்கள். அங்கு அவர்கள் தங்களை மிகவும் வசதியாக உணர்கிறார்கள். நீங்களே சென்று அவர்களிடம் கேட்டுப் பாருங்கள். அவர்கள் அங்கே சுதந்திரமாக இருந்தவாறு வசதியாக உணர்கிறார்களா? அல்லது ஆண்களுக்கு இடையே அமரும் போது உணர்வார்களா என்று கேட்டுப் பாருங்கள்.

ஆக, எவ்வாறிருப்பினும் ஒவ்வொருவருக்கும் தத்தமது மரபுகள் உள்ளன; போதனைகள் உள்ளன. நாங்கள் எங்கள் மார்க்கப் போதனைப்படி செயல்படுகிறோம் என்றால் அது ஆட்சேபனைக்குரிய விஷயம் ஒன்றும் கிடையாது! எங்களுடைய பெண்களுக்கு சுதந்திரம் உள்ளது. எங்களுடைய பெண்கள் படிப்பறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். எங்களுடைய பெண்கள் டாக்டர்களாகவும் இருக்கிறார்கள்; பொறியாளர்களாகவும் இருக்கிறார்கள்; வக்கீல்களாகவும் இருக்கிறார்கள்; டீச்சர்களாகவும் இருக்கிறார்கள்; எல்லா இடங்களிலும் பணியாற்றக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். இஜ்திமாக்களை நடத்துகிறார்கள். சுதந்திரமாக அவர்கள் செயல்படுகிறார்கள். சில சமயங்களில் ஆண்களை விட நல்ல முறையில் ஏற்பாடுகளை செய்கிறார்கள். ஆகவே பெண்களுடைய சுதந்திரம் பற்றிய கேள்வி என்றால், எங்கள் பெண்களுக்கு முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது.

வீட்டுப் பெண்களைப் பொறுத்தவரை, உங்களுடைய பெண்களுடனும் உங்களுடைய மனைவியருடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என்று இஸ்லாம் கூறுகிறது. நாங்கள் எங்களது பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்கிறோம். அவர்களுக்கு கண்ணியம் அளிக்கிறோம். அவர்களை அற்பமாக நினைத்து உங்களை விட்டு தள்ளி வைத்திருக்கிறோம் என்பது அதன் பொருள் அல்ல! அவர்களுடைய சுதந்திரத்தை அவர்களே நன்கு அறிவார்கள். 'நாங்கள் மார்க்க போதனையின்படி செயல்பட கூடிய பெண்கள் ஆவோம் இதில் நாங்கள் வசதியை உணர்கிறோம்' என்று அநேக இடங்களிலிருந்தும் எனக்கு இந்த அறிக்கைதான் கிடைக்கிறது.


ஆனால் வியாபாரத்தைப் பொறுத்தவரை, வேலையைப் பொறுத்தவரை, உலகில் வெளியே செல்வதைப் பொறுத்த வரை, வெளியிடங்களில் பணியாற்றுவதைப் பொறுத்தவரை, குழந்தைகளுடைய தர்பிய்யத்தைப் பொருத்தவரை - இது மிகவும் அவசியமாகும். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எவருக்கு மூன்று பெண் பிள்ளைகள் இருப்பார்களோ, அவர் அந்த மூவருக்கும் நல்ல கல்வியைக் கொடுப்பார் என்றால், அவர்களை நல்ல முறையில் வளர்ப்பார் என்றால், அந்த நபர் சொர்க்கவாசியாக ஆகிவிடுவார் அவர் சொர்க்கத்திற்கு செல்லக் கூடியவராக இருப்பார்."

பெண்களுடைய கல்வி விஷயத்தில் இந்த அளவு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே நாங்களும் இந்த அழுத்தத்தைக் கொடுக்கிறோம். எங்களுடைய அஹ்மதி சமூகத்தில் நீங்கள் ஆய்வு செய்து பாருங்கள்! பெண்களின் படிப்பறிவு ஆண்களை விட அதிகமாக உள்ளது. உயர்த் தகுதியை அடைந்தவர்கள் பெண்களாக இருக்கிறார்கள் ஆண்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள். இந்த விஷயம்தான் அடிப்படை விஷயமாகும். இது வருங்கால சந்ததிகளுக்குத் தர்பிய்யத் கொடுக்கக் கூடிய விஷயமாகும். இன்ஷா அல்லாஹ் இது நிலைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்தப் பள்ளிவாசல் இந்த நகரில் அமைதி, அன்பு, நேசம் ஆகியவற்றின் ஓர் அடையாளமாக நிலைத்திருக்கும். எந்த அளவு முடியுமோ அந்த அளவு நாங்கள் இந்த நகர மக்களுக்குத் தொண்டாற்றுவோம். இங்குள்ள அஹ்மதிகளிடம் நான் கூறிக் கொள்வதென்ன வென்றால், உங்கள் மீது இப்போது முன்பை விடவும் அதிக பொறுப்பு வந்து விட்டது. நீங்கள் இந்த நகரத்திற்குத் தொண்டாற்றுங்கள். இந்தப் பள்ளிவாசலினுடைய உரிமைகளைச் செலுத்துவதற்கு இங்குள்ள மக்களின் உரிமைகளையும் நீங்கள் செலுத்த வேண்டியது அவசியமாகும். பரஸ்பரம் அன்பு நேசத்தோடு வாழுங்கள். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக. நன்றி!

## தஹ்ரீகே ஜதீது சந்தாவின் அருள்

தன்ஸானியாவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அங்குள்ள ஒரு ஜமாஅத்தில் முஹம்மது ஸானீ சாஹிப் என்ற ஒரு நபர் இருக்கின்றார். அவர் அங்கு ஒரு கம்பெனியில் வேலை செய்து வருகின்றார். அந்தக் கம்பெனிக்குப் பொருளாதார இழப்பு ஏற்பட்டு விட்டது. அதன் காரணமாக எல்லா ஊழியர்களின் சம்பளத்தில் இருந்தும் பிடித்தம் செய்யப்படும் என்று முதலாளி கூறி விட்டார். அதனைக் கேட்ட இவருக்கு மிகுந்த துக்கம் ஏற்பட்டது. தஹ்ரீகே ஜதீது சந்தாவை செலுத்துவதற்கான கடைசி மாதமாக இருந்தது. முஅல்லிம் சாஹிப் இவரைத் தொடர்பு கொண்டு சந்தா கேட்டபோது, இவர் தனது கஷ்டத்தை வெளிப்படுத்தாமல் இருந்தது மட்டுமின்றி, அல்லாஹ்வின் மீதான முழுமையான நம்பிக்கையை வெளிப்படுத்தியவாறு தனது வாக்குறுதி முழுவதையும் செலுத்தி விட்டார். அவருடைய சம்பளம் பிடித்தம் செய்யப்படாது என்று அடுத்த நாளே அவருடைய முதலாளியிடம் இருந்து ஃபோன் வந்தது. ஆயினும், மற்ற ஊழியர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டது. ஆனால் இவருடைய சம்பளம் முழுமையாக வழங்கப்பட்டது.

(ஜுமுஆ குத்பா நவம்பர் 3, 2023)



# சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம் 14

தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்

## ஒப்பீட்டு மார்க்கக் கல்வி

1. யூத மதத்தைத் தோற்றுவித்தவர் யார்?

யூத மதத்தைத் தோற்றுவித்தவர் ஹஸ்ரத் மூஸா நபி (அலை) ஆவார்கள். இவர்கள் இஸ்ரவேலர்களிடையே தோன்றிய ஒரு மிகப் பெரிய நபி ஆவார்கள். இவர் ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்களுக்கு 500 ஆண்டுகளுக்குப் பின்னரும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்னரும் வாழ்ந்தவர் ஆவார்கள்.

2. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் எங்கு அல்லாஹ்விட-மிருந்து இறைஅறிவிப்பைப் பெற்றார்கள்?

அவர்கள் எகிப்திலுள்ள சீனாய் மலையில் வைத்து இறைவனின் அறிவிப்பைப் பெற்றார்கள்.

3. ஸப்த் என்றால் என்ன?

சனிக்கிழமை யூதர்களின் மிக முக்கிய நாளாகும். இதனையே ஸப்த் என்கிறோம். ஸப்த் என்றால் ஓய்வு என்று பொருளாகும்.

4. யூதர்களுக்கு மூஸா (அலை) அவர்கள் மூலமாக அருளப் பெற்ற இறைவேதம் எது?

தவ்ராத் வேதம் அருளப்பட்டது. அதன் பொருள் 'போதனைகள்' என்பதாகும்.

5. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் பிறந்த போது எகிப்தின் ஆட்சியாளர் யார்?

அப்போது ஃபிர்அவ்ன் ரமிஸஸ்-2 எகிப்தை ஆண்டு வந்தார்.

6. ஃபிர்அவன்கள் குறித்து நீங்கள் அறிவது என்ன?

நைல் நதி பள்ளத்தாக்கையும் அலெக்ஸாண்ட்ரியாவை-யும் ஆட்சி செய்தவர்கள் ஃபிர்அவ்ன்கள் எனப்பட்டனர்.

7. தன்னைப் பின்பற்றுகிறவர்களுடன் எகிப்தை விட்டுச் சென்ற ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் பின் தொடர்ந்து சென்ற ஃபிர்அவ்னுக்கு என்ன நேர்ந்தது?

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் பின்தொடர்ந்து சென்ற ஃபிர்அவ்னும் அவனது படையினரும் செங்கடலில் மூழ்கடிக்கப்பட்டனர்.

8. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பின்பற்றியோர் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

கிறித்தவர்கள் என்றழைக்கப்படுகிறார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் காலமாகி சில காலத்திற்குப் பின் அவர்களைப் பின்பற்றியோர் தமக்குத் தாமே இப்பெயரை வைத்துக் கொண்டார்கள்.

9. ஈஸா (அலை) அவர்கள் எங்கு பிறந்தார்கள்?

அவர்கள் பாலஸ்தீனத்தில் நாசரேத்திலிருந்து 70 கி.மீ. தூரத்திலுள்ள பெத்லகேம் என்னும் ஊரில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார்கள்.

10. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் தாயார் பெயர் என்ன?

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் தாயார் பெயர் ஹஸ்ரத் மர்யம் ஆகும்.

11. அவருடைய தந்தையார் பெயர் என்ன?

அவருக்கு தந்தையார் இல்லை. அவர் தந்தை இல்லாமல் பிறந்தவர் ஆவார்.

12. இவ்வாறு ஓர் ஆண் துணை இல்லாமல் குழந்தை பிறப்பது சாத்தியமா?

ஆம். பைபிளிலும் வேறு ஆதாரங்கள் உள்ளன. இது போன்ற பிறப்புகள் நடந்துள்ளதாக மருத்துவ இதழ்களும் பறைசாற்றுகின்றன. ஆனால் இது மிக அரிதாக நடக்கும் நிகழ்வாகும்.



13. இதுபோல் பைபிளில் காணப்படும் வேறு ஆதாரம் தருக.

சாலேமின் ராஜா மெல்கிசேதக் தந்தையும் தாயும் இல்லாமல் பிறந்ததாக புதிய ஏற்பாடு எபிரேயர் (7:1-3)-ல் கூறப்பட்டுள்ளது.

14. இயேசு இறைவனின் மகனா?

அவர் இறைவனின் தூதர் என்பது முஸ்லிம்களின் நம்பிக்கையாகும். இறைவனுக்கு மகனோ மகளோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

15. ஈஸா (அலை) அவர்கள் இறைவனின் மகன் என்று புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளதா?

பைபிள் ஈஸா (அலை) அவர்கள் தவிர வேறு சிலரையும் இறைவனின் மகன் என்று அழைக்கிறது. இது உவமையான ஒரு கூற்றாகும்.

16. இவ்வாறு பைபிள் அழைப்பவற்றிற்கு உதாரணம் தருக.

1) யாத்திராகமம் 4:22 (இஸ்ரவேலைக் குறித்து)
2) லூக்கா 3:38 (ஆதாமைக் குறித்து)

17. இயேசு பிறந்த நாள் குறித்து திருக்குர்ஆன் என்ன கூறுகிறது?

திருக்குர்ஆன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பிறந்த போது பேரீச்சம் பழங்கள் புத்தம் புதிதாக உற்பத்தியாகி இருந்ததாக கூறுகிறது. இது ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களாகும். கிறித்தவர்கள் கூறும் டிசம்பர் மாதமில்லை என்று தெரிகிறது.




18. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் குறித்து அஹ்மதிகளின் நம்பிக்கை என்ன?

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் மரணித்ததாக கிறித்தவர்கள் நம்புகின்றனர். ஆனால் அஹ்மதிகள் அவர்கள் சிலுவையில் மரணிக்கவில்லை. அவர்கள் அதிலிருந்து கீழிறக்கப்படும் போது மயங்கிய நிலையில் இருந்தார்கள் எனவும், பாறைகளினால் வெட்டப்பட்ட ஒரு பாதாள அறையில் வைக்கப்பட்டார்கள் எனவும் பின்னர் அதிலிருந்து தப்பித்து கிழக்கு நோக்கி பிரயாணம் செய்து காணாமற்போன ஆடுகளைத் தேடி காஷ்மீருக்குச் சென்று அங்கு 120-வது வயதில் காலமானார்கள் என்றும் நம்புகின்றனர். அவருடைய கல்லறை காஷ்மீரில் உள்ளது என்றும் அஹ்மதிகள் நம்புகின்றனர்.

19. இயேசு சிலுவையில் மரணிக்கவில்லை என்பதற்கு ஆதாரம் தருக.

1) யோனா தீர்க்கதரிசி மீன் வயிற்றில் மூன்று பகலும் மூன்று இரவும் உயிருடனிருந்ததைப் போன்று தாமும் பூமியின் வயிற்றில் இருப்பேன் என்று இயேசுவே முன்னறிவிப்பு செய்துள்ளார். (மத்தேயு 12:39-40)

2) தான் காணமற்போன இஸ்ரவேல் வீட்டாருக்கு அனுப்பப்-பட்ட தூதர் என்று கூறியுள்ளார். (மத்தேயு 15: 24). அவர் சிலுவையில் இறப்பதற்கு முன் பாலஸ்தீனத்தில் வாழ்ந்து வந்தது இஸ்ரவேலின் 2 கோத்திரத்தார் மட்டுமே ஆகும். பிற 10 கோத்திரத்தாரும் கிழக்குப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்துள்ளனர்.

3) போன்டியஸ் பிலாத்துவின் மனைவி கண்ட கனவு (மத்தேயு 27:19) இறைவன் ஈஸா (அலை) அவர்களைக் காப்பாற்றியுள்ளான் என்பதற்கான சான்றாகும்.

4) இயேசு சிலுவையில் தங்கியிருந்தது சில மணி நேரங்களே. அவருடன் சிலுவையில் அறையப்-பட்டவர்கள் உயிருடனேயே இருந்தனர். எனவே இயேசு அவ்வளவு சீக்கிரமாக மரித்ததாகக் கூற முடியாது. (மத்தேயு 15:44)

5) அவருடன் சிலுவையிலறையப்பட்டவர்களின் கால்கள் முறிக்கப்பட்டன. ஆனால் இயேசுவின் கால்கள் முறிக்கப்படவில்லை. அவரது விலா எலும்புகளில் காவலர் ஈட்டியால் குத்தியபோது அதிலிருந்து இரத்தமும் நீரும் வந்தது. (யோவான்:19:32-34)

6) மூன்றாம் நாள் கல்லறையைப் பார்த்தபோது அதன் வாயிலிலிருந்த கல் அகற்றப்பட்டிருந்தது. மனித சக்திக்கு அப்பாற்பட்டவராக இருந்திருந்தால் இவ்வாறாக நடக்க வாய்ப்பில்லை.

7) மகதலேனா மரியாள் இயேசுவைப் பார்த்தபோது அவரை தோட்டக்காரராக எடுத்துக் கொண்டார் (யோவான் 20:15). இத்தகைய மாறுவேடம் இயேசு சிலுவையில் மரணிக்க-வில்லை என்பதை எடுத்துக் கூறுகிறது.

8) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தம் பூத உடம்பில் தான் சீடர்களைச் சந்தித்தார்கள். அவர்களது உடம்பில் காயங்கள் காணப்பட்டன. அந்தக் காயங்களில் சீடர்கள் தமது கைகளை வைத்துப் பார்த்தனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தமது சீடர்களிடம் தமக்குப் பசிக்கிறது என்று கூறி தமது சீடர்கள் அளித்த உணவை வாங்கி உண்டார்கள் (லூக்கா 24:39-43).

9) சிலுவை சம்பவத்திற்குப் பிறகு தோன்றிய ஈஸா (அலை) அவர்கள் தமது இருப்பை வெளிப்படையாகத் தெரிவித்-தார்கள். ஆனால் மறைமுகமாகவே காட்சி அளித்தார்கள். அவர்கள் சிலுவையில் மரணித்து உயிர்த்தெழுந்திருந்தால் நேரடியாக நகரத்தின் மத்திக்குச் சென்று 'நான் மரணத்தை ஜெயித்துவிட்டேன்' என்று வெளிப்படையாகத் தெரிவித்திருக்கலாம்.

10) காஷ்மீரில் ஸ்ரீநகரில் கண்டறியப்பட்டுள்ள ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் கல்லறை (கபர்) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையிலறைந்து காப்பாற்றப்பட்டு இயற்கை மரணம் அடைந்தார்கள் என்பதற்குத் தெளிவான சான்றாகும்.

20. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் புதிய இறைச் சட்டம் எதையும் கொண்டுவந்தார்களா?

இல்லை, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சட்டத்தையே பின்பற்றினார்கள். அதனை முழுமையாக நிறைவேற்ற வந்தார்கள். (மத்தேயு 5:17)

21. ஈஸா (அலை) அவர்கள் இஸ்ரவேலருக்கு அனுப்பப்பட்ட தூதரே என்பதற்கு ஆதாரம் தருக.

“காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்-திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றபடியல்ல.” (மத்தேயு 15:24)

22. பைபிளில் மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன என்பதற்கு ஆதாரம் தருக:

1) உபாகமம் 34:5-8-ல் நாம் காண்கிறோம்:

"அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலேயே கர்த்தருடைய வார்த்தையின் படியே மரித்தான். அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கில் அடக்கம் பண்ணினார். நாள் வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான். மோசே மரிக்கிற போது 120 வயதாயிருந்தான். அவன் கண் இருளடையவுமில்லை. அவன் பெலன் குறையவும் இல்லை. இஸ்ரேல் புத்திரன் மோவாபின் சமனான வெளிகளில் மோசேக்காக 30 நாட்கள் அழுது கொண்டிருந்தார்கள். மோசேக்காக அழுது துக்கங் கொண்டாடிய நாட்கள் முடிந்தது."

இந்த வசனங்கள் மோசேக்கு இறக்கப்பட்டது அல்ல. பின்னாளில் சேர்க்கப்பட்டவையாகும் என்பதை இந்த வசனங்கள் தெரிவிக்கின்றன.

2) யோசுவா 24:29-ல் வருகிறது:

"இந்தக் காரியங்கள் நிகழ்ந்த பின்பு நூனின் குமாரனாகிய யோசுவா கர்த்தருடைய ஊழியக்காரன் 110-வது வயதில் மரணமடைந்தான்."

3) இது போன்று யோபு 42:17-ல் வருகிறது:

"யோபு நெடுநாள் இருந்து பூரண வயதுள்ளவனாய் மரித்தான்"

மேற்படி வசனங்கள் யோசுவாவிற்கு இறக்கப்பட்ட -வைகள் அல்ல. பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை என்று தெளிவாகிறது.

23. பழைய ஏற்பாட்டில் திரு நபி (ஸல்) அவர்களின் வருகை குறித்து முன்னறிவிப்பு எவ்வாறு உள்ளது?

1) "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரில் இருந்து எழுப்புவான்." (உபாகமம் 18:15)

2) "உன்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணி என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன். நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர் அவர்களுக்கு சொல்லுவார். அவர் சொல்லும் வார்த்தைகளுக்கு செவி கொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன். சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத் துணியும் தீர்க்கதரிசியும் வேறே தேவனின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக் கடவன்." (உபாகமம் 18:18-20)

இஸ்ரவேலர்களின் சகோதர ஜனங்களாகிய இஸ்மவேலர்கள் மத்தியில் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் தோற்றம் இன்று நிறைவேறியுள்ளது என்பதை நமக்கு உணர்த்துகிறது.

3) கர்த்தர் சீனாயிலிருந்து எழுந்தருளி சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார். பாரான் மலையிலிருந்து பிரகாசித்து பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார். அவர்களுக்காக அக்கினிப் பிரமாணம் அவரது வலக்கரத்திலிருந்து புறப்பட்டது. (உபாகமம் 33:2)

இவ்வசனத்திலிருந்து தெளிவாகும் விஷயங்களாவன:

1) சீனாய் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தோனறிய தேசம்.

2) சேயீர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் தோற்றத்தைக் குறிக்கிறது. சேயீர் ஹஸ்ரத் ஈஸா (அலை) காட்டிய அற்புதங்கள் நிகழ்வுற்ற இடமாகும்.

3) பாரான் - இறைவனின் மூன்றாவது வெளிப்பாடு என்பது மக்கா - மதீனாவிற்கு இடைப்பட்ட பாரான் வெளி (அரபியில் ஃபாரான்) என்பதாகும்.. இது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் தோற்றத்தால் நிகழ்ந்தது. அக்கினிப் பிழம்பு என்பது திருக்குர்ஆன் ஆகும்.

24. வேதங்கள் குறித்து நீவிர் அறிவது என்ன?

இந்துக்களின் புனித நூற்கள் வேதங்கள் ஆகும். அவை ரிக். யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு புத்தகங்கள் ஆகும். அவை அருளப்பட்ட அசல் வடிவில் இல்லாமல் பல மாற்றங்களுக்குட்பட்டு இருப்பதால் அவற்றின் நம்பகத் -தன்மை இப்போது சந்தேகத்திற்குரியதே.

25. கிருஷ்ணர் குறித்து கூறுக:

இவர் இந்துக்கள் மத்தியில் தோன்றிய ஒரு பெரிய நபி ஆவார்.


26. பின்வரும் வெளிப்பாட்டைப் பெற்றவர் யார்?

"தீயவர்களை அழித்து எளியவர்களைக் கட்டி காப்பவரே. தங்கள் புகழ் கீதையில் எழுதப்பட்டுள்ளது".

இந்த வெளிப்பாடு உர்துவில் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களால் பெறப்பட்டுள்ளது. இந்துக்களுக்கு ஸ்ரீகிருஷ்ணரைப் போன்று ஓர் அவதாரமாகவும் முஸ்லிம்களுக்கு 'மஹ்தி' மற்றும் 'மஸீஹ்' ஆகவும் தான் வந்திருப்பதாகவும் அன்னார் அறிவித்துள்ளார்கள்.

27. குறிப்பாக இந்துக்களுக்கு போதனைகள் வழங்கும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் நூல்கள் யாவை?

1) ஸுர்மா சஷ்மா ஆர்யா (உர்து)
2) ஆர்ய தர்ம் ( உர்து)
3) ஷஹ்னயே ஹக் ( உர்து)




28. கிரந்த் குறித்து நீவிர் அறிவது யாது?

கிரந்த் என்பது சீக்கியர்களின் புனித நூலாகும். குருநானக் அவர்களின் பேச்சுக்கள் போதனைகள் இஸ்லாமியரின் ஐவேளைத் தொழுகையைப் பின்பற்றுதல், வருடாந்திர நோன்பைப் பின்பற்றுதல், ஸக்காத் கொடுத்தல், மக்காவிற்குப் புனித யாத்திரை செல்லுதல் ஆகியன இந்த நூலில் காணப்படுகின்றன. இதனைப் பின்பற்றாதவர் தண்டனைக்குரியவர் என்றும் கூறப்பட்டுள்ளனர்.

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்...)

# 700 இறை கட்டளைகள்

(தொகுப்பு: ஹனீஃப் அஹ்மது மஹ்மூது)

தமிழாக்கம்: இப்னு யூசுஃப்

6

**வாழ்வின் கடைசி மூச்சு வரை அல்லாஹ்வை வணங்க வேண்டும்**

وَاعْبُدْ رَبَّكَ حَتّٰى يَاْتِيَكَ الْيَقِيْنُ ؏

உமக்கு மரண(நேர)ம் வரும் வரை உம்முடைய இறைவனை வணங்கிக் கொண்டேயிருப்பீராக. (அல் ஹிஜ்ர் 15:100)

**இறைவனை வணங்குவதில் பெருமையை வெளிப்படுத்துவது (கூடாது)**

وَلَهٗ مَنْ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَمَنْ عِنْدَهٗ
لَا يَسْتَكْبِرُوْنَ عَنْ عِبَادَتِهٖ وَلَا يَسْتَحْسِرُوْنَ ۚ

வானங்களிலும், பூமியிலுமுள்ளவர்கள் யாவரும் அவனுக்கே உரியவர்களாவர். அவனிடமுள்ளவர்கள் அவனை வணங்குவதில் பெருமையடிப்பதுமில்லை. (அதனால்) சோர்வடைவதுமில்லை. (அல் அ(ன்)ம்பியா 21:20)

اِنَّ الَّذِيْنَ عِنْدَ رَبِّكَ لَا يَسْتَكْبِرُوْنَ
عَنْ عِبَادَتِهٖ وَيُسَبِّحُوْنَهٗ وَلَهٗ يَسْجُدُوْنَ ۩

நிச்சயமாக உம்முடைய இறைவனுக்கு நெருக்கமானவர்கள் அவனை வணங்குவது குறித்து பெருமையடித்துக் கொள்வதில்லை. அவர்கள் எப்போதும் அவனது தூய்மையை எடுத்துரைத்தும் அவனுக்குச் சிரம் பணிந்தும் இருப்பார்கள். (அல் அ:.ரா:.ப் 7:207)

اِنَّ الَّذِيْنَ يَسْتَكْبِرُوْنَ عَنْ عِبَادَتِيْ
سَيَدْخُلُوْنَ جَهَنَّمَ دٰخِرِيْنَ ؏

என்னை வணங்காமல், கர்வம் கொண்டிருப்பவர்கள் நிச்சயமாக இழிவடைந்தவர்களாக நரகத்தில் நுழைவார்கள். (அல் மு:.மின் 40:61)

اِنَّهُمْ كَانُوْٓا اِذَا قِيْلَ لَهُمْ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ ۙ يَسْتَكْبِرُوْنَ ۙ

அல்லாஹ்வையன்றி வேறெவரும் வணக்கத்திற்குரியவர் இல்லை என்று அவர்களிடம் கூறப்பட்ட பொழுது, அவர்கள் கர்வம் கொண்டிருந்தனர். (அஸ் ஸா:.ப்பாத் 37:36)

**ஷைத்தானை வணங்காதீர்கள்**

اَلَمْ اَعْهَدْ اِلَيْكُمْ يٰبَنِيْٓ اٰدَمَ اَنْ لَّا تَعْبُدُوا الشَّيْطٰنَ ۚ
اِنَّهٗ لَكُمْ عَدُوٌّ مُّبِيْنٌ ۙ وَّاَنِ اعْبُدُوْنِيْ ؕ هٰذَا صِرَاطٌ مُّسْتَقِيْمٌ

ஆதமின் மக்களே! நீங்கள் ஷைத்தானை வணங்கக் கூடாது என்று நான் உங்களைக் கட்டுப்படுத்தவில்லையா? ஏனென்றால் நிச்சயமாக அவன் உங்களுக்கு வெளிப்படையான பகைவனாவான்.

மேலும் நீங்கள் என்னையே வணங்க வேண்டும் இதுவே நேரான வழி (என்று நான் கட்டுப்படுத்தவில்லையா?) (யாஸீன் 36:61-62)

**பொய் தெய்வங்களை வணங்குவது தடுக்கப்பட்டுள்ளது**

قُلْ يٰٓاَيُّهَا الْكٰفِرُوْنَ ۙ لَآ اَعْبُدُ مَا تَعْبُدُوْنَ ۙ
وَلَآ اَنْتُمْ عٰبِدُوْنَ مَآ اَعْبُدُ ۚ وَلَآ اَنَا عَابِدٌ مَّا عَبَدْتُّمْ ۙ
وَلَآ اَنْتُمْ عٰبِدُوْنَ مَآ اَعْبُدُ ؕ لَكُمْ دِيْنُكُمْ وَلِيَ دِيْنِ ؏

(நாம் எக்கால முஸ்லிம்களிடமும் கூறுகிறோம்) நீர் (உம் காலத்து நிராகரிப் போரிடம்) கூறுவீராக: நிராகரிப்பவர்களே! கேளுங்கள்! நீங்கள் வணங்குவதைப் போல் நான் வணங்குவதில்லை. நான் வணங்குவதைப் போல் நீங்கள் வணங்குவதில்லை. மேலும் நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குவதில்லை. நான் வணங்குகிறவனை நீங்களும் வணங்குவதில்லை. (ஏனெனில்) உங்கள் மார்க்கம் உங்களுக்கு (ஒரு வழிமுறையினையு)ம். என் மார்க்கம் எனக்கு (ஒரு வழிமுறையினையு)ம் (ஏற்படுத்தி) உள்ளது. (அல் கா:.பிரூன் 109:2-7)

**பொய் தெய்வங்களை வணங்குவதில் எந்தவித சந்தேகத்திற்கும் ஆளாகி விட வேண்டாம்**

فَلَا تَكُ فِيْ مِرْيَةٍ مِّمَّا يَعْبُدُ هٰٓؤُلَآءِ ؕ مَا يَعْبُدُوْنَ اِلَّا كَمَا يَعْبُدُ
اٰبَآؤُهُمْ مِّنْ قَبْلُ ؕ وَاِنَّا لَمُوَفُّوْهُمْ نَصِيْبَهُمْ غَيْرَ مَنْقُوْصٍ ؏

எனவே (செவியேற்பவரே!) இவர்கள் வணங்கி வருவது குறித்து நீர் எந்தவிதமான ஐயத்திற்கும் ஆளாகி விட வேண்டாம். (இவர்களுக்கு) முன்னர் இவர்களின் மூதாதையர்கள் வணங்கியது போன்றே இவர்களும் வணங்குகின்றனர். நிச்சயமாக நாம் இவர்களுக்கு இவர்களின் பங்கு சிறிதும் குறைக்கப்படாமல் முழுமையாகவே கொடுத்து விடுவோம். (ஹூது 11:110)

**உங்கள் சுய விருப்பத்திற்கு (அடிமையாகி அதையே) கடவுள்களாக ஆக்க வேண்டாம்**

وَلَا تَتَّبِعِ الْهَوٰى فَيُضِلَّكَ عَنْ سَبِيْلِ اللّٰهِ ؕ

மேலும் வீண் விருப்பத்தைப் பின்பற்ற வேண்டாம். அது உம்மை அல்லாஹ்வின் வழியை விட்டும் தவறச் செய்து விடும். (ஸாது 38:27)

اَرَءَيْتَ مَنِ اتَّخَذَ اِلٰهَهٗ هَوٰىهُ ؕ اَفَاَنْتَ تَكُوْنُ عَلَيْهِ وَكِيْلًا ۙ

(தூதரே!) தமது தீய இச்சைகளைத் தமது கடவுளாக ஆக்கிக் கொண்டவரது நிலையை நீர் காணவில்லையா? (அவனைக் கட்டாயப்படுத்தித் தவறான வழியிலிருந்து

தடுப்பதற்கு) நீர் அவருக்குக் கண்காளிப்பாளர் ஆவீரா? (அல் ஃபுர்கான் 25:44)

فَإِن لَّمْ يَسْتَجِيبُوا لَكَ فَاعْلَمْ أَنَّمَا يَتَّبِعُونَ أَهْوَاءَهُمْ ۚ وَمَنْ أَضَلُّ مِمَّنِ اتَّبَعَ هَوَاهُ بِغَيْرِ هُدًى مِّنَ اللَّهِ ۚ إِنَّ اللَّهَ لَا يَهْدِي الْقَوْمَ الظَّالِمِينَ

அவர்கள் உமக்குப் பதிலளிக்கவில்லையாயின், அவர்கள் தமது தீய விருப்பங்களையே பின்பற்றுகின்றனர் என்று நீர் அறிந்து கொள்வீராக. மேலும் அல்லாஹ்விடமிருந்து எந்த வழி காட்டலுமின்றித் தனது தீய விருப்பத்தைப் பின்பற்றுபவனை விட மிகத் தவறான வழியில் செல்பவன் எவன்? நிச்சயமாக அநீதியிழைக்கும் சமுதாயத்தினருக்கு அல்லாஹ் (வெற்றியின்) வழியினைக் காட்டுவதில்லை. (அல் கஸஸ் 28:51)

أُولَٰئِكَ الَّذِينَ طَبَعَ اللَّهُ عَلَىٰ قُلُوبِهِمْ وَاتَّبَعُوا أَهْوَاءَهُمْ

அத்தகையவர்களின் உள்ளங்களில் அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான். மேலும் அவர்கள் தங்கள் தீய விருப்பங்களைப் பின்பற்றுகின்றனர். (முஹம்மது 47:17)

❖❖ அர் ரூம்:30, அல் ஜாஸியா:24

### அல்லாஹ்வே அனைத்துப் பொருட்களிலும் படைப்பாளன் ஆவான்

قُلِ اللَّهُ خَالِقُ كُلِّ شَيْءٍ وَهُوَ الْوَاحِدُ الْقَهَّارُ

நீர் கூறுவீராக: எல்லாவற்றையும் அல்லாஹ் (ஒருவனே) படைத்துள்ளான். அவன் ஏகனும், வல்லமை மிக்கவனும் ஆவான். (அர் ரஅது 13:17)

ذَٰلِكُمُ اللَّهُ رَبُّكُمْ ۖ لَا إِلَٰهَ إِلَّا هُوَ ۖ خَالِقُ كُلِّ شَيْءٍ فَاعْبُدُوهُ ۚ وَهُوَ عَلَىٰ كُلِّ شَيْءٍ وَكِيلٌ

இத்தகையவனே உங்கள் இறைவனாகிய அல்லாஹ். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனுமில்லை. அவன் ஒவ்வொன்றையும் படைப்பவனாவான். ஆகவே நீங்கள் அவனையே வணங்குங்கள். மேலும் அவன் ஒவ்வொரு பொருளுக்கும் காப்பாளனாவான். (அல் அன்ஆம் 6:103)

ذَٰلِكُمُ اللَّهُ رَبُّكُمْ خَالِقُ كُلِّ شَيْءٍ لَّا إِلَٰهَ إِلَّا هُوَ ۖ فَأَنَّىٰ تُؤْفَكُونَ

இத்தகையவனே உங்கள் இறைவனும், எல்லா -வற்றையும் படைப்பவனுமாகிய அல்லாஹ். அவனையன்றி வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை. எனவே நீங்கள் எங்கே திருப்பப்படுகின்றீர்கள்? (அல் முஃமின் 40:63)

اللَّهُ خَالِقُ كُلِّ شَيْءٍ ۖ وَهُوَ عَلَىٰ كُلِّ شَيْءٍ وَكِيلٌ

அல்லாஹ் எல்லாவற்றையும் படைப்பவனும், எல்லாவற்றையும் பாதுகாப்பவனுமாவான். (அஸ் ஸுமர் 39:63)

### உயிரற்ற சிலை எவ்வாறு படைப்பாளனாக ஆக முடியும்

قُلْ أَرَأَيْتُم مَّا تَدْعُونَ مِن دُونِ اللَّهِ أَرُونِي مَاذَا خَلَقُوا مِنَ الْأَرْضِ أَمْ لَهُمْ شِرْكٌ فِي السَّمَاوَاتِ ۖ ائْتُونِي بِكِتَابٍ مِّن قَبْلِ هَٰذَا أَوْ أَثَارَةٍ مِّنْ عِلْمٍ إِن كُنتُمْ صَادِقِينَ

நீர் கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வையன்றி அழைப்பவற்றைக் கவனித்தீர்களா? அவர்கள் பூமியில்



படைத்திருப்பதை எனக்குக் காட்டுங்கள். அல்லது வானங்களைப் படைப்பதில் அவர்களுக்கு ஏதேனும் பங்கு உண்டா? நீங்கள் உண்மை பேசுபவர்களாயின், இதற்கு முன்னுள்ள எந்த வேதத்தையாவது அல்லது அறிவின் சில சான்றுகளையாவது என்னிடம் கொண்டு வாருங்கள். (அல் அஹ்காஃப் 46:5)

وَمَنْ أَضَلُّ مِمَّن يَدْعُو مِن دُونِ اللَّهِ مَن لَّا يَسْتَجِيبُ لَهُ إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ وَهُمْ عَن دُعَائِهِمْ غَافِلُونَ

மறுமைநாள் வரை தங்களுக்குப் பதிலளிக்காதவற்றை அல்லாஹ்வுக்குப் பதிலாக அழைப்பவனை விட மிகவும் வழிகெட்டவன் எவன்? மேலும் அவர்கள், இவர்களின் அழைப்பை அறிவதே இல்லை. (அல் அஹ்காஃப் 46:6)

هَٰذَا خَلْقُ اللَّهِ فَأَرُونِي مَاذَا خَلَقَ الَّذِينَ مِن دُونِهِ ۚ بَلِ الظَّالِمُونَ فِي ضَلَالٍ مُّبِينٍ ⑪

இது அல்லாஹ்வின் படைப்பாகும். எனவே நீங்கள் அவனையன்றி, மற்றவர்கள் எதனைப் படைத்துள்ளனர் என்பதை எனக்குக் காட்டுங்கள். ஆனால் (உண்மையில்) அநீதியிழைப்பவர்கள் மிகவும் பகிரங்கமான வழிகேட்டில் உள்ளனர். (லுக்மான் 31:12)

### அல்லாஹ்வுக்கு உதவி செய்தல்

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِن تَنصُرُوا اللَّهَ يَنصُرْكُمْ وَيُثَبِّتْ أَقْدَامَكُمْ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி செய்தால், அவன் உங்களுக்கு உதவி செய்து, உங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவான். (முஹம்மது 47:8)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا أَنصَارَ اللَّهِ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ் -வுக்காக உதவி செய்பவர்களாக ஆகி விடுங்கள். (அஸ் ஸஃப் 61:15)

### எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் உதவியை நாடுவது

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

(இறைவா!) நாங்கள் உன்னையே வணங்குகிறோம்: மேலும் உன்னிடமே உதவி கேட்கிறோம். (அல் ஃபாத்திஹா 1:5)

وَادْعُوا مَنِ اسْتَطَعْتُم مِّن دُونِ اللَّهِ إِن كُنتُمْ صَادِقِينَ

மேலும் (உங்கள் உதவிக்காக) அல்லாஹ்வையன்றி உங்களால் (அழைக்க) முடிந்தவர்களை அழைத்துக் கொள்ளுங்கள். (ஹூது 11:14)

(தொடரும்...)




**மவ்லவி முஹம்மது ஹமீது கவ்ஸர் சாஹிப்**
**நாஸிர் தஃவத்தே இலல்லாஹ், காதியான்**

தமிழாக்கம்: இப்னு வஸீம்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

இஸ்லாத்தை விட்டு ஓடாதீர்கள்! நேர்வழி இதுவே!

உறங்கிக் கொண்டிருப்போரே விழித்துக் கொள்ளுங்கள்!
முற்பகல் சூரியன் இதுவே!

நம்மை உருவாக்கிய இறைவன் மீது
நான் ஆணையிட்டுக் கூறுகிறேன்.
இப்போது விண்ணின் கீழ் இறை மார்க்கம் இதுவே!

மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே!

கண்ணியத்திற்குரிய அவையோரே!

இஸ்லாம் மார்க்கம் எல்லா வகையிலும் முழுமை-யானது, நிறைவானது என்பதும் இந்த பூமியில் வசிக்கும் மனிதர்களுக்குத் தேவையான ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் அதில் கூறப்பட்டுள்ளது என்பதும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கொள்கையாகும். இது குறித்து அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ
وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا

இன்று நான் உங்களுக்காக, உங்களது மார்க்கத்தை முழுமை ஆக்கியுள்ளேன். மேலும், உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும், உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்துள்ளேன். (5:4)

நினைவிருக்கட்டும்! திருக்குர்ஆனின் எந்தவொரு கட்டளையும் நம்பிக்கை கொண்ட எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் துன்பமோ சிரமமோ அளிக்கக் கூடியதல்ல. மாறாக, இது முழுக்க முழுக்க கருணையாகவும், அவர்களைத் தூய்மைபடுத்துவதற்காகவும் உள்ளது.

பிறகு, அல்லாஹ் சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.:.பா (ஸல்) அவர்களிடம், 'நீர் எல்லாக் காலத்து, எல்லா இடத்து மக்களிடமும் அறிவிப்பு செய்வீராக' என்று இவ்வாறு கூறியிருக்கிறான். (7:159)

قُلْ يٰۤاَيُّهَا النَّاسُ اِنِّيْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعًا

அதாவது, அன்னாரது தூதுத்துவம் எல்லாக் காலத்து, எல்லா இடத்து மனிதர்களுக்காகவும் ஆகும்.

ஓர் உண்மையான முஸ்லிம், 'திருக்குர்ஆன் ஒரு முழுமையான வாழ்வியல் வழிகாட்டியாகும் என்றும், அதில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு கட்டளையும், அதன் நுட்ப ஞானம் தனக்குப் புரிந்தாலும் புரியாவிட்டாலும் தனது சொந்த பலனுக்காக இருக்கிறது என்றும் நம்பிக்கையும் உறுதியும் கொள்கிறார். மேலும், எந்த முஸ்லிம் திருக்குர்ஆனின் கட்டளைகள்படி செயல்படுவதில்லையோ அவர் அல்லாஹ்வின் பார்வையில் தண்டனைக்குரியவர் ஆவார் என்ற நம்பிக்கையும் அவருக்கு இருக்கிறது.

ஆகவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"எவர் ஒருவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறு கட்டளையைக் கூட தவிர்க்கிறாரோ அவர் ஈடேற்றத்திற்கான கதவைத் தனது கைகளால் மூடிக் கொள்கிறார் என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். உண்மையான மற்றும் முழுமையான ஈடேற்றத்திற்கான வழிகளைத் திருக்குர்ஆன் திறந்துள்ளது. ஏனைய அனைத்தும் அதன் நிழலாக இருந்தன." (கிஷ்தீ நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19, பக்கம் 26)

எல்லாவற்றிற்கும் முதலான கேள்வி, 'பர்தாவின் அவசியம் என்ன?' என்பதாகும். இந்தக் கேள்விக்கான பதிலுக்காக நான் பணிவுடன் எடுத்துரைப்பதாவது, சில ஆண்டுகளுக்கு முன்னர் சண்டிகரின் ஒரு சபையில் சுதந்திரமான சிந்தனை கொண்ட ஒரு பெண் நிருபர் என்னிடம், 'பெண்கள் ஏன் புர்கா அணிகிறார்கள்? இதன் அவசியம் என்ன?' என்று கேட்டார்.

அது கடும் குளிரான டிசம்பர் மாதமாக இருந்தது. குளிரும் அன்று மிக அதிகமாக இருந்தது. அந்தப் பெண் பத்திரிக்கையாளர் குளிருக்கான Coat அணிந்து போர்வை-யையும் போர்த்திக் கொண்டிருந்தார். நான் அந்தப் பெண் நிருபரிடம், 'நீங்கள் இவ்வளவு நீளமான Coat-ஐயும் போர்வை-யையும் ஏன் அணிந்துள்ளீர்கள்?' என்று கேட்டேன். அதற்கு அவர், 'குளிரிலிருந்து தப்பிப்பதற்காக' என்று பதிலளித்தார்.

நான் அவரிடம், 'எவ்வாறு குளிரிலிருந்து தப்பிப்பதற்காக உங்களுக்குக் குளிருக்கான போர்வையையும் நீளமான Coat-ஐயும் அணிய வேண்டிய தேவையிருக்கிறதோ அவ்வாறே, ஒரு முஸ்லிம் பெண் தீய, அசுத்தமான பார்வைகளிலிருந்து தப்பிப்பதற்காக பர்தா அணிவதற்கான தேவையை உணர்கிறார். இதில் ஆட்சேபனை என்ன இருக்கிறது?' என்று கேட்டேன். அல்ஹம்துலில்லாஹ்! இந்த பதிலால் அவர் திருப்தியடைந்து விட்டார்.

அகில உலகங்களின் எஜமானன் பெண்ணின் உடலில் ஒரு பெண்மைக் கவர்ச்சியையும் ஆணின் உடலில் ஆண்மை ஈர்ப்பையும் வைத்திருக்கிறான். இவ்விரண்டிற்கும் இடையில், நம்மைப் படைத்தவன் வெட்கத்தையும் நாணத்தையும் தடையாக ஆக்கி வைத்துள்ளான். எனவே, சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:



فَإِنَّ الْحَيَاءَ مِنَ الْإِيمَانِ அதாவது, 'வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும்'. (அல் புகாரீ, கிதாபுல் ஈமான்)

இது பல தீமைகளில் மூழ்குவதற்கான வழியில் தடையாகி விடுகிறது. ஒரு மனிதனிட -மிருந்து அல்லது ஒரு சமூகத்திலிருந்து வெட்கம், நாணம் எனும் தடை அகன்று விடும் போது, பிறகு, ஷைத்தானியமும் வெட்கக்கேடும் உயிர்க்கொல்லி நோயைப் போன்று பரவ ஆரம்பித்து விடுகின்றன.

இத்தகைய மக்களைப் பற்றித்தான் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

إِذَا لَمْ تَسْتَحِي فَاصْنَعْ مَا شِئْتَ அதாவது, 'வெட்கம் அகன்று விடும் போது, மனிதன் விரும்பியதை செய்யட்டும்'. (அல் புகாரி, கிதாபுல் அதப்)

பாரசீக மொழியிலும் ஒருவர் இவ்வாறு கூறியுள்ளார்:

بے حیا باش ہرچہ خواہی کن

அதாவது, 'நீ வெட்கமற்றவனாக ஆகிவிடு! விரும்பியதை செய்து கொள்!'

தற்காலத்தில் உலகில் பெரும்பாலான மனிதர்களிட -மிருந்து வெட்கம், நாணம் அகன்று விட்டது என்ற உண்மையை எவராலும் மறுக்க முடியாது. அவர்களுடைய கண்களில் வெட்கம், நாணம் இல்லை. அவர்களுடைய நடத்தைகளும் தோரணைகளும் இதைச் சுட்டிக் காட்டுகின்றன.

உதாரணமாக, பிரிட்டனிலிருந்து வெளியாகும் மாத இதழ் Review of Religions -இன், ஏப்ரல் 2022 இதழில் 'Islam A Timeless Faith That Protects Women' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வெளியானது. அதன் ஒரு மேற்கோளின் பொருள் இதுவாகும்: சமீபத்தில், Transport for London (TFL)-இல், சுரங்க இரயில் வலையமைப்பில் Poster-கள் ஒட்டப் -பட்டிருந்தன. அதில் ஏற்றுக் கொள்ளத்தகாத சமூக நடத்தையை விட்டும் பயணிகளை எச்சரிக்கப்பட்டிருந்தது.

உதாரணமாக, இரயிலில் நுழைபவர்களை உற்றுப் பார்ப்பது, யாரையாவது வேண்டுமென்றே உரசுவது, பொருத்தமற்ற முறையில் தொடுவது, Up Skirting (அதாவது, ஒருவருடைய ஆடைகளுக்குக் கீழாக அவர்களுடைய அனுமதியின்றி Photo எடுப்பது) முதலியவை அதில் அடங்கும்.

பொது போக்குவரத்தில் பெண்கள் எவ்வளவு நிம்மதியின்மையை உணர்கிறார்கள் என்று TFL-இன் இந்தத் திட்டம் பெரிதும் வரவேற்கப்பட்டது. கட்டுரை எழுதிய பெண் இவ்வாறு எழுதியுள்ளார்: இந்தத் திட்டம் குறித்த செய்திகள் என்னை மகிழ்விக்கவும் செய்தன; வேதனைக்கும் உள்ளாக்கின. இந்த நடவடிக்கை பயனுள்ளதும் மிகவும் அவசியமானதுமாகும்.

ஏனெனில், ஐக்கிய நாடுகளின், பெண்களுக்கான தற்போதைய (2021-ஆம் ஆண்டின்) கணக்கெடுப் -பில், 18 முதல் 24 வயது வரையிலான பிரிட்டன் பெண்களில் 97 சதவீதம் பேர் தங்களுக்குத் தொல்லை கொடுக்கப்படுவதாக ஒப்புதல் அளித்துள்ளார்கள். (ரிவியூ ஆ.்.ப் ரிலீஜியன்ஸ் ஏப்ரல் 2022)

கண்ணியத்திற்குரிய அவையோரே!

இந்தக் கணக்கெடுப்போ பிரிட்டன் தொடர்பானது. ஆனால், உண்மை என்னவென்றால், ஏறக்குறைய உலகின் பெரும்பாலான நாடுகளில் இதே நிலைதான் இருக்கிறது. பெரும்பாலான பத்திரிகைகள், இதழ்கள் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்களில் அரை நிர்வாண பெண்களுடைய படங்கள் வெளியிடப்படுகின்றன.

ஒரு பொருளில், Product-இல் இத்தகைய படங்களை அச்சிடவில்லை என்றால், அது விற்பனையாகாது என்று கூறப்படுகிறது. மேலும், இந்தப் படங்கள் பெரும்பாலான இளைஞர்களின் பாலியல் ஆசைகளைத் தூண்டுகின்றன. பிறகு, இந்த இளைஞர்கள் சில பாலியல் குற்றங்களில் ஈடுபடுகிறார்கள்.

இது போன்ற எல்லா வகையான, தவறான பாலியல் நடத்தைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக, இஸ்லாம் ஒரு நம்பிக்கை கொண்ட ஆணுக்குப் பார்வையைத் தாழ்த்தி வைக்குமாறும், நம்பிக்கை கொண்ட பெண்ணுக்குப் பர்தா அணியுமாறும் பார்வையைத் தாழ்த்தி வைக்குமாறும் கட்டளை இட்டுள்ளது. இந்த அனைத்து உண்மைகளும் இருந்தும், தற்காலத்தில் பெயர் தாங்கிய இஸ்லாமிய நாடுகளிலும் இஸ்லாம் அல்லாத நாடுகளிலும் 'இஸ்லாமிய பர்தா' கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படுகிறது.

இஸ்லாத்திற்கு எதிரான ஒரு குறிப்பிட்ட வர்க்கம், சமூக வலைதளங்கள் மற்றும் இதர வழிவகைகள் மூலமாக, 'இஸ்லாமிய பர்தாவை' விவாதத் தலைப்பாக்கி, பலவகையான சந்தேகங்களை உருவாக்குவதற்கு முயற்சி செய்து கொண்டே இருக்கிறது. அவர்களது நோக்கம், முஸ்லிம் இளைஞர்களையும் இளம் பெண்களையும் 'இஸ்லாமிய பர்தாவை' வெறுக்கச் செய்து அதைக் கைவிடுவதற்குத் தூண்டுவதாகும்.

வியப்பு என்னவெனில், விவாதிக்கக்கூடிய சில ஆண்கள், பெண்களின் பெயர்கள் முஸ்லிம்களின் பெயர்களைப் போன்று உள்ளன. ஆனால், அவர்கள் கூறும் விஷயங்கள் திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்திற்குப் பகிரங்கமாக எதிராக இருக்கின்றன. இத்தகைய மக்கள் இஸ்லாத்திற்கு எதிரான கூட்டத்திற்கு இஸ்லாத்தின் மீது ஆட்சேபனைகள் செய்தவற்கு விஷயங்களை சேகரித்துக் கொடுக்கிறார்கள்.

இத்தகைய நயவஞ்சக சிந்தனைகளைக் கொண்டி -ருக்கும் பெயர் தாங்கி அறிஞர்களும் சிந்தனையாளர்களும் எல்லாக் காலத்திலும் இஸ்லாமிய ஆடையை அணிந்து கொண்டு திருக்குர்ஆனின் போதனைகள் மீது ஆட்சேபனைகள் செய்து, கொள்கையில் உறுதியான முஸ்லிம் ஆண்களுக்கும் பெண்களுக்கும், சோதனை மற்றும் குழப்பத்திற்குக் காரணியாகத் திகழ்கிறார்கள்.

ஆனால், இவர்களின் வழிகெடுக்கும் சிந்தனைகள் மற்றும் எண்ணங்களால், உண்மையான முஸ்லிம்கள் ஒருபோதும் தாக்கத்திற்கு உள்ளானதும் இல்லை. இனியும் ஆக மாட்டார்கள். இன்ஷா அல்லாஹுத்தஆலா.

அல்லாஹ் மனித உடலைப் படைத்திருக்கிறான் என்பதை, ஏறத்தாழ உலகின் எல்லா மதமும் ஏதோவொரு கோணத்தில் ஏற்றுக் கொள்கிறது. திருக்குர்ஆனோ இந்தக் கருத்தை மிகத் தெளிவாகவும் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தும் உள்ளது. அல்லாஹ் மனிதனைக் களி மண், விந்து, ஒட்டுகின்ற பொருள், சதைக் கட்டி, எலும்புகள் ஆகிய படைக்கும் படித்தரங்களைக் கடக்கச் செய்த பிறகு, அஹ்ஸனு தக்வீம், அதாவது, சிறந்ததிலும் சிறந்த நிலையில் படைத்துள்ளான்.

உலகில் நாம் பார்க்கிறோம்! ஒரு கைவினைத் தொழிலாளியோ அல்லது பொருள் தயாரிப்பவரோ ஒரு எந்திரத்தை உருவாக்கும் போது, அல்லது கண்டுபிடிக்கும் போது, அந்த எந்திரத்தைப் பயன்படுத்துவதற்கென சில வழிகாட்டும் விதிகளை நிர்ணயிக்கிறார். அவற்றைப் பயன்படுத்திய வண்ணமே அதை சரியாகவும் சீராகவும் வைக்க முடியும். ஆனால், அந்தக் கோட்பாடுகள் கருத்திற் கொள்ளப்படாவிட்டால், எந்திரத்தில் பழுது ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு இருக்கும்.

இந்த உதாரணத்திலிருந்து நாம் புரிய முடியும்! மனிதனைப் படைத்தவன், அதாவது, அல்லாஹ் ஆண்கள் மற்றும் பெண்கள், சமூகத்தில் சரியான முறையில் ஆன்மிக மற்றும் பௌதிக பங்களிப்பை வழங்குவதற்காக அவர்களுக்கு சில பொன்னான விதிகளை உருவாக்கியுள்ளான். அவற்றின் படி செயல்படுவது, அல்லாஹ்வின் மறையின் மீது ஈமான் கொண்டிருக்கக்கூடிய ஒவ்வொரு மனிதனுக்கும், மேலும், இந்தப் போதனைகள் படி செயல்பட்டது அல்லது செயல்படாதது குறித்து தன்னிடம் கேட்கப்படும் என்று உறுதியாக நம்பக்கூடிய ஒவ்வொரு மனிதனுக்கும் கடமையாகும்.

நினைவிருக்கட்டும்! அல்லாஹ் திருக்குர்ஆனில் இதையும் கூறியுள்ளான்:

مَآ اَنۡزَلۡنَا عَلَيۡكَ الۡقُرۡاٰنَ لِتَشۡقٰٓى ۙ

நீர்! துன்பத்திற்காளாக வேண்டும் என்பதற்காக நாம் உமக்கு (இந்த)க் குர்ஆனை இறக்கவில்லை. (20:3)

திருக்குர்ஆனின் போதனைகளில் ஒன்று, நம்பிக்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்கள் தங்களது பார்வையைத் தாழ்த்தி வைக்க வேண்டும் என்பதாகும். மேலும், நம்பிக்கை கொண்ட பெண்களுக்கு அவர்கள் இஸ்லாமிய ஹிஜாப், அதாவது, பர்தா அணிவதற்கான கட்டளை உள்ளது. பர்தா பற்றிக் கூறப்பட்டுள்ள திருக்குர்ஆன் வசனங்கள் இவையாகும்:

وَقُلۡ لِّلۡمُؤۡمِنٰتِ يَغۡضُضۡنَ مِنۡ اَبۡصَارِهِنَّ وَيَحۡفَظۡنَ فُرُوۡجَهُنَّ
وَلَا يُبۡدِيۡنَ زِيۡنَتَهُنَّ اِلَّا مَا ظَهَرَ مِنۡهَا وَلۡيَضۡرِبۡنَ بِخُمُرِهِنَّ
عَلٰى جُيُوۡبِهِنَّ ۖ وَلَا يُبۡدِيۡنَ زِيۡنَتَهُنَّ



பொருள்: நீர், நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ் நோக்கி வைத்திருக்குமாறும், தங்கள் மறைவான உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் கூறுவீராக. இது அவர்களுக்கு மிகத் தூய்மையானதாகும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதனை நன்கு அறிபவனாவான். மேலும், நீர் நம்பிக்கை கொண்ட பெண்களிடம், அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ் நோக்கி வைத்திருக்குமாறும், தங்கள் மறைவான உறுப்புக்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும், தானாகவே வெளிப்படுவதைத் தவிர தங்கள் அலங்காரத்தை வெளிப்படுத்தாமல் இருக்குமாறும், தங்கள் முந்தானை ஆடையால் தங்கள் மார்புகளை மறைத்து அணிந்து கொள்ளுமாறும், தங்கள் அலங்காரத்தை வெளிப்படுத்தாமல் இருக்குமாறும் கூறுவீராக.' (24:31,32)

يٰۤاَيُّهَا النَّبِىُّ قُلْ لِّاَزۡوَاجِكَ وَبَنٰتِكَ وَنِسَآءِ الۡمُؤۡمِنِيۡنَ يُدۡنِيۡنَ عَلَيۡهِنَّ مِنۡ
جَلَابِيۡبِهِنَّ ؕ ذٰ لِكَ اَدۡنٰۤى اَنۡ يُّعۡرَفۡنَ فَلَا يُؤۡذَيۡنَ ؕ وَكَانَ اللّٰهُ غَفُوۡرًا رَّحِيۡمًا

பொருள்: "நபியே! நீர் உம் மனைவிகளிடமும், உம் பெண் மக்களிடமும், நம்பிக்கை கொண்டவர்களின் பெண்களிடமும் அவர்கள் (வெளியில் செல்லும் போது) தங்களுடைய பெரிய மேலாடைகளைக் கொண்டு தங்களைப் போர்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக. இது அவர்கள் பிரித்து அறியப்படுவதற்கு மிகவும் பொருத்தமானது. அவர்கள் துன்புறுத்தப்பட(வும்) மாட்டார்கள். மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்." (33:60)

முதலில் கூறப்பட்ட சூரா அந்நூரின் வசனத்தில் அல்லாஹ் நம்பிக்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கி வைத்திருக்குமாறு கட்டளையிட்டுள்ளான்.

இது திருக்குர்ஆனின் உண்மைத்துவத்துக்கான ஒரு மாபெரும் சான்றாகும். அதன் ஒவ்வொரு சொல்லும் உலகைப் படைத்தவன் தரப்பிலிருந்து இறங்கியது என்பதற்கான ஆதாரமாகும். அதன் நுட்ப ஞானம் தனக்கான நேரத்தில் வெளிப்பட்டுக் கொண்டே செல்கிறது. பார்வையைத் தாழ்த்தி வைப்பதற்கான கட்டளையை அல்லாஹ் திருக்குர்ஆனில் வழங்கியுள்ளான்.

இன்று அந்நியர்களும் கூட, பெரும்பாலான தீமைகளின் ஆரம்பம் பார்வைகள் இணைவதனாலும் அதைத் தவறாகப் பயன்படுத்துவதனாலும் ஏற்படுகிறது என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். ஆக, தற்காலத்தில் Body Language மற்றும் Eye signal என்ற தலைப்பில் பல நூல்கள் மற்றும் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றில், பார்வை மற்றும் கண்கள் மூலமாக சீர்கேடுகள் உருவாவது பற்றி எழுதப்பட்டுள்ளது. வேவு பார்ப்பவர்கள், உளவு பார்ப்பவர்கள் சிலர், மற்றவர் ஒருவரின் கண்களைப் பார்த்து அவரது மூளையின் நிலையைக் கணித்து விடுவார்கள் என்று கூறப்படுகிறது.

இந்தக் காரணத்தினாலேயே, பெரும் பெரும் தலைவர்களின் பாதுகாப்புக் குழுவினர் தங்களது பார்வை மற்றும் கண்களிலிருந்து யாரும் எதுவும் பெற முடியாத வண்ணம் கருப்புக் கண்ணாடி அணிந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது. மேலும், வசியம் செய்வதன் ஆரம்பம் பார்வை மற்றும் கண்கள் மூலமாகவே இருக்கிறது என்பதும் பார்க்கப்படுகிறது.

மேலும், அல்லாஹ்வும் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

يَعْلَمُ خَآئِنَةَ الْاَعْيُنِ அவன் (அல்லாஹ்) கண்களின் வஞ்சகத்தையும் அறிகிறான். (40:20)

ஆக, கண்களின் வஞ்சகமும் இருக்கிறது. அதன் தவறான விளைவுகள் உருவாகின்றன என்பது அல்லாஹ்வின் இந்தக் கூற்றிலிருந்து தெரிய வருகிறது.

திருக்குர்ஆனைப் புரிவதற்குத் திருக்குர்ஆனே போதுமானது. ஆனால், விளக்கவுரையின் மற்றும் தெளிவுபடுத்துதலின் தேவையுடைய சில வசனங்கள் இருக்கின்றன. ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் தாமே எடுத்துரைத்த விளக்கம், மேலும், தற்காலத்தில் அன்னாரின் இரண்டாம் வருகையின் வெளிப்பாடான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானீ வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்கள் எடுத்துரைத்த விளக்கம் மற்றும் அன்னாருக்குப் பிறகு கலீ.ஃபாக்கள் எடுத்துரைத்துக் கொண்டிருப்பதுதான் அந்த வசனங்களுக்கான அசல் விளக்கவுரையாகும்.

இதுவே திருக்குர்ஆனின் போதனைகள்படி செயல்படுவதற்காக உள்ள அசல் கோட்பாடாகும். இந்த விதி ஏற்றுக் கொள்ளப்படவில்லையாயின், முஸ்லிம்களின் ஒவ்வொரு பிரிவும் தங்கள் இஷ்டத்துக்கும் சுய லாபத்துக்கும் ஏற்றவாறு திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கு விளக்கம் அளித்தால், பிறகு, பெரும்பாலான கட்டளைகளுக்கு 72 அல்லது 73 விளக்கவுரைகள் ஆகிவிடும். இஸ்லாத்தின் எதிரிகள் இதை நகைப்பிற்குரிய மார்க்கமாகக் கூறுவார்கள். நிகழ்காலத்தில் இந்தக் கருத்து வேறுபாடுகள் வெளிப்படும் என்ற அச்சத்தைக் கருத்திற் கொண்டு, அதன் நிரந்தர தீர்வுக்காக சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் இவ்வாறு முன்னறிவிப்பு செய்திருந்தார்கள்:

எந்தவொரு கருத்து வேறுபாடுள்ள விஷயத்திலும் தீர்ப்பு கூறுவதற்காக “ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்கள் நெறி நீதி தீர்ப்பவராக இருப்பார்கள்.”

திருக்குர்ஆனின் கட்டளைகளைக் குறித்து அன்னாரது மற்றும் அன்னாருக்குப் பிறகு, கண்ணியத்திற்குரிய கலீ.ஃபாக்களின் தீர்ப்பு உறுதியானதாகவும் இறுதியான-தாகவும் இருக்கும்.

### பர்தா அணிதல் மற்றும் பார்வையைத் தாழ்த்தி வைத்திருத்தல் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் போதனைகள்

பர்தா அணிதல் மற்றும் பார்வையைத் தாழ்த்தி வைத்திருத்தலில் இருக்கும் நுட்பம் மற்றும் பயன்கள் குறித்து ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைவனின் தூய மறையில் ஆண், பெண் இருவருக்கும் இவ்வாறு போதனை வழங்கப்பட்டுள்ளது........... நீர் நம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறுவீராக! அவர்களும் தங்களுடைய கண்களை அந்நிய ஆண்களைக் காண்பதை விட்டும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும், தங்களுடைய காதுகளையும் அந்நிய ஆண்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

அதாவது, பாலுணர்ச்சியைத் தூண்டும் அவர்களுடைய குரல்களைக் கேட்கக் கூடாது. தங்களுடைய மறைவான பகுதிகளைப் பர்தாவில் வைத்திருக்க வேண்டும். தங்களுடைய அழகுக்குரிய அங்கங்களை எந்தவோர் அந்நிய ஆணுக்கு முன்னும் திறக்கக் கூடாது.

தங்களுடைய மேலாடைகளைக் கழுத்து வழியாகத் தலைக்கு வந்து விடும் வகையில் தலையில் போர்த்திக் கொள்ள வேண்டும். அதாவது, கழுத்து, இரண்டு காதுகள், தலை மற்றும் நெற்றிக்கும் காதுக்கும் இடைப்பட்ட பகுதி ஆகிய அனைத்தும் பர்தாவிற்குள் வந்து விட வேண்டும். மேலும், நடனமாடுபவர்களைப் போன்று தங்களுடைய கால்களை நிலத்தில் அடி(த்து நட)க்கக் கூடாது. (இஸ்லாமி உஸூல் கீ .ஃபிலாஸ.ஃபீ, ரூஹானி கஸாயின் தொகுதி 10, பக்கம் 341,342)

திருக்குர்ஆன் முஸ்லிம் ஆண்களுக்கும் பெண்-களுக்கும், அவர்கள் தங்களது பார்வையைத் தாழ்த்தி வைத்திருக்குமாறு வழிகாட்டுகிறது. ஒருவர் மற்றவரைப் பார்க்கவே பார்க்காத போது, பிறகு, பாதுகாப்பாக இருப்பார்கள். சிறைச்சாலையைப் போன்று பெண் அடைத்து வைக்கப்பட வேண்டும் என்பது ஒருபோதும் இஸ்லாமிய பர்தாவின் பொருளல்ல.

*(தொடர்ச்சி 21-ஆம் பக்கம்...)*

## கேள்வி - பதில்



**பாங்கு சொல்லிக் கொண்டிருக்கும்போது நாம் ஏதாவது மார்க்கப் பணி செய்து கொண்டிருந்தால் அதனை நிறுத்த வேண்டுமா?**

பாங்கு சொல்லும்போது நாம் அமைதியாகி விட வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த துஆவை செய்து கொண்டிருக்க வேண்டும். நீங்கள் விளையாடிக் கொண்டிருந்தால் விளையாட்டை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஜல்ஸா (மாநாடு) நடந்து கொண்டிருக்கும்போது அதே இடத்தில் பாங்கு கூறப்பட்டால் ஜல்ஸாவை நிறுத்தி விட்டு அமைதியாகி விட வேண்டும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கேள்வி-பதில் நிகழ்ச்சியிலிருந்து...




قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ اَللّٰهُ الصَّمَدُ ۚ لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۙ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ

சில சொற்களுக்குள் அடங்கியுள்ள இந்தத் தலைப்பு, இறைஞானங்களைக் கொண்டுள்ள மிக மிக ஆழமான ஒரு கடலாகும். இதில், உலக மதங்களுக்கு எதிரில், இஸ்லாமிய மார்க்கத்திற்கு நிகரற்ற மேன்மையை வழங்கக் கூடிய அளவு, இஸ்லாமிய மார்க்கத்தின் ஒரு சிறப்பு எடுத்துரைக்கப் -பட்டுள்ளது. அதில் பத்தில் ஒரு பங்கு கூட ஏனைய மதங்களில் காணப்படுவதில்லை. இந்தத் தலைப்பு மிக ஆழமான, இறைஞானங்கள் நிறைந்த தலைப்பாகும்.

எல்லாருக்கும் மேலான ஒருவன், என்ற வகையிலானா -லும் சரி அல்லது ஏதாவது சிலை போன்ற வடிவத்திலானா -லும் சரி! உலகின் எல்லா மார்க்கங்களிலும், ஏதாவது ஒரு வகையில், இறைவனைப் பற்றிய சிந்தனை காணப்படுகிறது.

ஆனால், இஸ்லாம் மார்க்கத்தில் தெளிவாகத் தெரிகிற ஒரு சிறப்பாவது, அதில் இறையிருப்பு மற்றும் இறைப் பண்புகள் குறித்து எந்த அளவு முழுமையான மற்றும் திருப்தியளிக்கக் கூடிய விளக்கம் கிடைக்கிறதென்றால், அது ஏனைய எல்லா மார்க்கங்களுக்கு எதிராகவும் இஸ்லாம் மார்க்கத்திற்கு மிக உயர்ந்த மற்றும் தனிச்சிறப்பான அந்தஸ்தை வழங்குகிறது. இந்தத் தொகுப்புரைக்குப் பிறகு, இஸ்லாம் முன்வைக்கும் தூய ஓரிறைக் கொள்கை குறித்து சில விஷயங்கள் முன்வைக்கப்படுகின்றன.

### இறைவனின் ஏகத்துவத்திற்கான சான்று:

திருக்குர்ஆன் இறையிருப்புக்கான அழகான ஆதாரங்களை முன்வைப்பதுடன், இறைவனின் முழுமையான மற்றும் தூய ஏகத்துவத்தை மிகவும் தெளிவான சொற்களில் முன்வைத்துள்ளது. இது தொடர்பாக, ஆரம்பத்தில் திலாவத் செய்யப்பட்ட, வெறும் நான்கு வசனங்களையே கொண்ட, சூரா இக்லாஸ் மட்டுமே ஏனைய நீண்ட நெடிய ஆதாரங்கள் மற்றும் சான்றுகள் மீது மேலோங்கி இருக்கிறது. இதில் மிகத் தெளிவாகவும் நிறைவாகவும் இந்த விஷயத்தின் மீது ஒளியிடப்பட்டுள்ளது.

சூரா இக்லாஸின் ஆரம்பத்தில் 'குல்' எனும் சொல்லை வைத்து, இந்த முக்கியமான கொள்கையை நன்றாக பறைசாற்றுமாறு கூறப்பட்டுள்ளது. அதாவது, (குல்ஹுவ -வல்லாஹு அஹது) நீர் கூறுவீராக! இறையிருப்பு குறித்து நீங்கள் கொண்டிருக்கின்ற பலவகையான எண்ணங்கள் அனைத்தும் கட்டுக்கதைகளாகும்.

இறைவனைப் பற்றி உறுதியான மற்றும் நம்பிக்கையான விஷயம், 'அல்லாஹு அஹத்' அதாவது, அவன் எத்தகையவன் என்றால், எல்லா விதத்திலும் எல்லா வகையிலும் தனது இருப்பில் ஒருவனே ஆவான். அவன் எவருடைய ஆரம்ப தொடராகவும் இல்லை. இறுதி முடிவாகவுமில்லை. அவன் எவரைப் போன்றவனும் இல்லை. அவனைப் போன்று எவரும் இல்லை. இங்கு திருக்குர்ஆன் பயன்படுத்தியுள்ள 'அஹத்' எனும் சொல் குறிப்பாக கவனமாகப் பார்க்க வேண்டியதாகும்.

அது தன்னகத்து விநோதமான தனிச்சிறப்பைக் கொண்டுள்ளது. அது என்னவென்றால், அதில் எந்த ரீதியாகவும் இரண்டாவது குறித்த சிந்தனை காணப்படுவதில்லை. ஏனைய அனைத்து எண்ணிக்கைகளிலும் இரண்டாவது குறித்த சிந்தனைக் காணப்படுகிறது. எதுவரை என்றால், 'வாஹித்' எனும் சொல்லிலும் 'அவ்வல்' என்ற சொல்லிலும் இரண்டாவது காணப்படுகிறது. 'வாஹித்' என்றால், முதலாவது என்று பொருள். அதாவது, மற்றவர்களைக் காட்டிலும் முதலாவது. இது இரண்டாவது என்று ஒன்று இருக்க வேண்டும் என்ற தேட்டத்தை அளிக்கிறது. பிறகு, 'அவ்வல்' எனும் சொல் இரண்டாவது இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பை அளிக்கிறது. ஆனால், 'அஹத்' எனும் சொல்லின் பொருள் 'ஏகன்' என்பதாகும். ஏகன் எனும் சொல் இரண்டாவது என்பதை மறுத்துரைக்கிறது.




### ஓர் இறைஞானமிக்க கருத்துக்கு விளக்கம்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அரபி மொழியில் ஒன்று என்ற பொருளைக் குறிப்பதற்கு இரண்டு சொற்கள் பயன்படுகின்றன. ஒன்று 'வாஹித்' எனும் சொல். மற்றொன்று 'அஹத்' எனும் சொல். வாஹித் எப்படிப்பட்ட எண் என்றால், அதற்கு பிறகு பிற எண்கள் தொடர்கின்றன. அதவாது, இரண்டு, மூன்று, நான்கு. ஆனால், இரண்டாவது எண் குறித்த சிந்தனையே மூளையில் தோன்றாதபோதுதான், அரபியில் அஹத் எனும் சொல் கூறப்படுகின்றது. (த.ஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 524)

இறைவனுக்காக பயன்படுத்தப்படுகின்ற 'அஹத்' மற்றும் 'வாஹித்' எனும் சொற்களுக்கு இடையே உள்ள வித்தியாசம் என்னவென்றால், அல்லாஹ்வுக்காக 'அஹத்' எனும் சொல் பயன்படுத்தப்பட்டால், அது அல்லாஹ்வுடைய ஏகத்துவத்தைக் குறிக்கின்றது. மற்ற எந்த இருப்பைக் குறித்த எண்ணமும் உள்ளத்தில் தோன்றுவதில்லை. அல்லாஹ்வுக்காக 'வாஹித்' எனும் சொல் பயன்படுத்தப் -பட்டால், அங்கு அவனது பண்புகளின் ஏகத்துவத்தைக் குறிக்கின்றது. அதாவது, அவன் தன்னுடைய பண்புகளில் முழுமை பெற்றவன். அவனைத் தவிர வேறு எவரும் பண்புகளில் முழுமை பெற்றவராக இல்லை. (த.ஃப்ஸீரே கபீர் தொகுதி10 பக்கம் 525)

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நல்லுரைகள்:

இக்காலத்தின் இமாமாக தோன்றியுள்ள ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு, ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றியதன் பரக்கத்தினால், இஸ்லாமிய போதனைகளின் நிகரற்ற ஞானத்தை அல்லாஹ் வழங்கியிருந்தான். இஸ்லாம் முன்வைக்கும் தூய ஓரிறைக் கொள்கை தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துரைத்த ஞானமிக்க நல்லுரைகளிருந்து சிலவற்றை மாதிரியாக முன்வைக்கின்றேன்.

உலகத்திலிருந்து தொலைந்து போய்விட்டிருந்த அந்த ஏகத்துவத்தை இந்த ஒரு வீரர் மட்டுமே மீண்டும் உலகிற்குக் கொண்டு வந்தார்.

இந்த அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது எனும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருள்களும் சாந்தியும் அவருக்கு உண்டாவதாக) இறைத்தூதர் எவ்வளவு உயர்வான தகுதியைக் கொண்ட இறைத்தூதர் ஆவார்கள் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கின்றேன். அவருடைய உயரிய அந்தஸ்தின் எல்லையைக் கண்டறிய முடியாது. அவருடைய பரிசுத்தமாக்கும் தாக்கத்தைப் பற்றி அனுமானிப்பது, மனிதனால் முடியாத வேலை. அறியப்பட வேண்டிய முறையில் அவருடைய உயர்ப் பதவி பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும்.

உலகிலிருந்து மறைந்த அந்த ஓரிறைமையை (தவ்ஹீதை) மீண்டும் உலகிற்குக் கொண்டு வந்தவர் அந்த வீரர் ஒருவரே! அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற கருணையால் அவர் உயிரே உருகி விட்டது. எனவே அவருடைய உள்ளத்தின் இரகசியத்தை உணர்ந்திருந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் - முன்னவர் பின்னவர் அனைவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவருடைய குறிக்கோள்களை அவர் தம் வாழ்நாளிலேயே நிறைவேற்றினான். (ரூஹானீ கஸாயின் தொகுதி 22 - ஹகீகத்துல் வஹீ பக்கம் 115)

எல்லா சமுதாயங்களும் ஷிர்க் (இணைவைத்தல்) எனும் ஆடையைக் கழற்றி விட்டு, தவ்ஹீது (ஏகத்துவம்) எனும் ஆடையை அணிந்து கொண்டன.

நமது நபி (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதில் ஒரு மாபெரும் மார்க்கத்தைப் புதுப்பிப்பவராகத் திகழ்ந்தார்கள். அன்னார் தொலைந்து போன உண்மையை மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தார்கள். எந்த நபியும் இந்தப் பெருமிதத்தில், நமது நபி (ஸல்) அவர்களுடன் இணையமாட்டார்கள். அன்னார் முழுவுலகையும் ஓரிருளில் காணப் பெற்றார்கள். பிறகு, அன்னாரது தோற்றத்தினால் அந்த காரிருள் ஒளியாக மாறிவிட்டது. அன்னார் தோன்றிய அந்த சமுதாயம் முழுவதும் ஷிர்க் (இணைவைத்தல்) எனும் ஆடையைக் கழற்றி விட்டு, தவ்ஹீது (ஏகத்துவம்) எனும் ஆடையை அணிந்து கொள்ளாத வரை அன்னார் மரணிக்கவில்லை. (லெக்சர் சியால்கோட் ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 206)




### நீங்கள் இறைவனை ஏகனாகவும் இணையற்றவனாகவும் புரியுங்கள்:

நற்பேறு பெற்றவர்களே! உங்களுடைய ஈடேற்றத் -திற்காக எனக்கு வழங்கப்பட்டுள்ள இந்தப் போதனையில் அழுத்தமாக ஈடுபடுங்கள். நீங்கள் இறைவனை ஏகனாகவும் இணையற்றவனாகவும் புரியுங்கள். விண்ணிலிருந்தும் மண்ணிலிருந்தும் அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். இறைவன் காரணிகளைப் பயன்படுத்துவதை விட்டும் உங்களைத் தடுக்கவில்லை. ஆனால், இறைவனை விட்டு விட்டு காரணிகள் மீதே நம்பிக்கைக் கொள்பவர் இணை வைப்பவர் ஆவார்..... இஸ்லாத்தின் உண்மைத்துவம், உங்களுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய சன்னிதானத்தில் விழுந்து விட வேண்டும் என்பதாகும். இறைவனும் அவனது கட்டளைகளும் எல்லாக் கோணங்களிலும் உங்களுடைய பௌதீகத்தை விட உங்களுக்கு முதன்மையாகி விட வேண்டும். (தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன். ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 63)

### உண்மையான தவ்ஹீதுக்கு (ஓரிறைமைக்கு) விளக்கம்:

வெறும் நாவினால் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறி விட்டு மனதில் ஆயிரக்கணக்கான சிலைகள் ஒன்று திரண்டிருந்தால் அது தவ்ஹீத் ஆகாது.

மாறாக, எந்த நபர் தன்னுடைய ஒரு செயல், தந்திரம், சூழ்ச்சி மற்றும் திட்டத்துக்கு இறைவனுக்கு நிகரான மகத்துவம் தருவாரோ அல்லது இறைவன் மீது வைக்க வேண்டிய நம்பிக்கையை யாராவது ஒரு மனிதன் மீது வைப்பாரோ அல்லது இறைவனுக்குக் கொடுக்க வேண்டிய

மகத்துவத்தைத் தனக்குக் கொடுப்பாரோ இந்த அனைத்து சூழ்நிலைகளிலும் அவர் இறைவனின் பார்வையில் இணைவைப்பாளர் ஆவார். தங்கம், வெள்ளி, பித்தளை அல்லது கற்கள் முதலியவைக் கொண்டு செய்யப்படுகின்ற மேலும் அவற்றின் மீது நம்பிக்கை வைக்கப்படுகின்ற, அவை மட்டும் சிலைகள் அல்ல. மாறாக, ஒவ்வொரு பொருளுக்கும் சொல்லுக்கும் செயலுக்கும் இறைவனுக்கு உரிமையான மகத்துவத்தை வழங்குவது, இறைவனது பார்வையில் சிலையாகும்....

பிறகு அன்னார் மிகவும் அறிவுப்பூர்வமான வகையில் தூய ஏகத்துவத்தைப் பற்றி இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:

நினைவிருக்கட்டும்! நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று, இறைவன் நம்மிடம் எதிர்ப்பார்க்கின்ற உண்மையான அந்த ஏகத்துவம் மேலும் எதை ஏற்றுக் கொள்வதனால் நமது ஈடேற்றம் சாத்தியமோ அது என்னவென்றால், இறைவனோடு இணைவைக்கப்படுகின்ற எல்லா விஷயங்களை விட்டும், அது சிலையாக இருக்கட்டும்; மனிதனாக இருக்கட்டும்; சூரியனாக இருக்கட்டும்; சந்திரனாக இருக்கட்டும் அல்லது தனது ஆன்மாவாக இருக்கட்டும் அல்லது தனது திட்டங்கள், சதிகள், சூழ்ச்சிகளாக இருக்கட்டும் இவை அனைத்தையும் விட்டும் இறைவனைத் தூய்மையானவன் எனக் கருத வேண்டும். அவனுக்கு எதிரில் எவரையும் ஆற்றல் உள்ளவராகக் கருதக் கூடாது. எவரையும் வாழ்வாதாரம் அளிப்பவராக ஏற்கக் கூடாது. எவரையும் கண்ணியமளிப்பவ-ராகவோ இழிவடையச் செய்பவராகவோ கருதக் கூடாது. எவரையும் உதவியாள-ராகக் கொள்ளக் கூடாது.



இரண்டாவது, தனது நேசத்தை அவனுக்காக மட்டுமே குறிப்பாகக் கொண்டிருக்க வேண்டும். தனது வழிபாடுகளை அவனுக்காக மட்டுமே கொண்டிருக்க வேண்டும். தனது பணிவை அவனோடு மட்டுமே குறிப்பாக வெளிப்படுத்த வேண்டும். தனது எதிர்ப்பார்ப்புகள் அனைத்தையும் அவனிடம் மட்டுமே கொண்டிருக்க வேண்டும். அவனுக்கு மட்டுமே அஞ்ச வேண்டும்.

எனவே எந்த ஏகத்துவமும் இந்த மூன்று வகையான சிறப்புகள் இன்றி முழுமை பெற முடியாது. முதலாவது இருப்பின் அடிப்படையில் ஏகத்துவம். அதாவது அவனுக்கு எதிரில் மற்ற அனைத்தையும் ஒன்றுமில்லாததாகக் கருத வேண்டும். மேலும் அவை அனைத்தையும் அழியக் கூடியவையாகவும் உண்மையற்றவையாகவும் கருதுவது. இரண்டாவது பண்புகளின் அடிப்படையில் ஏகத்துவம். அதாவது, படைத்து பரிபாலிப்பவன் வணக்கத்திற்குரியவன் ஆகிய பண்புகள் இறைவனைத் தவிர வேறு எவருக்கும் இருப்பதாகக் கொள்ளாமலிருத்தல். மேலும் வெளிப்படையாக பல்வேறு பரிபாலிப்பவர்களாக அல்லது பலனளிப்பவர்களாகத் தென்படுகின்ற அனைவருமே அவனால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு என நம்பிக்கை கொள்வது. மூன்றாவது தனது நேசம், உண்மை மற்றும் உளத்தூய்மை அடிப்படையில் ஏகத்துவம். அதாவது அன்பு போன்ற இறைவழிபாட்டின் அம்சங்களில் மற்றெவரையும் இறைவனுக்கு இணையாகக் கொண்டிருக்காமலிருத்தல் மற்றும் அவனுள் மாய்ந்து விடுதல். (சிராஜுத்தீன் ஈஸாயீ கே சார் சவாலோன் கா ஜவாப் - ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 349-350)

இறைவனின் ஏகத்துவம் எனும் தலைப்பு மிகவும் ஆழமானது என்று ஏற்கனவே கூறப்பட்டிருந்தது. அதில் நுட்பமாக ஆழ்ந்து சிந்திக்க வேண்டி தேவையுள்ளது. இதைப் புரிவதற்கு நாம் மீண்டும் மீண்டும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸிஹ் (அலை) அவர்களுடைய நுட்பமான மேற்கோள்களின் பால் செல்ல வேண்டும். இன்னும் சில மேற்கோள்களை முன்வைக்கிறேன். அவற்றின் மூலம் உண்மையான ஏகத்துவம் மற்றும் அதனுடைய அனைத்து அம்சங்களின் மீதும் அறிவுப்பூர்வமான முறையில் ஒளியிட முடியும். கேளுங்கள்!

அன்னார் கூறுகிறார்கள்: தனியாக இருந்து இறைவனை ஒருவனாகக் கொள்வது மட்டும் தவ்ஹீத் ஆகாது. மாறாக, அத்துடன் செயல் வடிவில், அதாவது உணர்ச்சி பொங்கும் முழு அன்புடன் தன்னை மாய்த்துக் கொண்டு இறைவனின் ஏகத்துவத்தைத் தான் ஏற்று நடப்பதே முழுமையான ஏகத்துவமாகும். அதன் அடிப்படையிலேயே ஈடேற்றம் அமைந்துள்ளது. அதையே இறை அடியார்கள் பெறுகின்றனர். (ரூஹானி கஸாயின் தொகுதி 21 பக்கம் 64)

பிறகு மற்றொரு கோணத்தில் இந்தக் கருத்தை இவ்வாறு எடுத்துரைக்-கிறார்கள்:

ஏகத்துவம் ஏற்பட காரணியாக, ஏகத்துவத்தை நிலைநாட்டுபவராக ஏகத்துவத்தின் தந்தையாக, ஏகத்துவத்-தின் தலையூற்றாக மற்றும் ஏகத்துவத்தை முழுமையாக வெளிப்படுத்துபவராக இருப்பவர் நபி மட்டும்தான். அவர் மூலமாகவே இறைவனின் மறைவான முகம் தென்படுகின்றது. மேலும் இறைவன் இருக்கின்றான் எனத் தெரிய வருகிறது......

ஏகத்துவம் மற்றும் இறைவனை அறிந்து கொள்வதற்கான மூலப்பொருள் இறைத்தூதர் மூலமாகவே உலகிற்குக் கிடைக்கிறது என்பதில் சந்தேகமில்லை. நபி இல்லாமல் ஒருபோதும் கிடைக்க முடியாது. மேலும் இந்த விஷயத்தில் எல்லாரையும் விட உயர் முன்மாதிரியை நமது நபி (ஸல்) அவர்கள் காட்டினார்கள்.

அதாவது, அசுத்தத்தில் மூழ்கியிருந்த ஒரு சமுதாயத்தை அசுத்தத்திலிருந்து வெளியே எடுத்து பூஞ்சோலையாக மாற்றி விட்டார்கள். மேலும், ஆன்மிகப் பசி மற்றும் தாகத்தால் மரணிக்க இருந்த அவர்களுக்கு முன்னால், உயர்தரமான ஆன்மிக உணவுகளையும் இனிப்பான பானங்களையும் வைத்து விட்டார்கள். அவர்களை மிருகத்தனமான அந்த நிலையிலிருந்து மாற்றி மனிதர்கள் ஆக்கினார்கள். பிறகு சாதாரண மனிதர்கள் என்ற நிலையிலிருந்து பண்பட்ட மனிதர்களாக மாற்றினார்கள். பிறகு பண்பட்ட மனிதர்கள் என்ற நிலையிலிருந்து முழுமையடைந்த மனிதர்களாக மாற்றினார்கள். அவர்களுக்கு எந்த அளவுக்கு அடையாளங்களைக் காட்டினார்கள் என்றால், அவர்களுக்கு

இறைவனையே காட்டி விட்டார்கள். அவர்களிடம் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தினார்கள் என்றால், அவர்கள் வானவர்களோடு கைகுலுக்கினார்கள். (ரூஹானி கஸாயின் தொகுதி 22 ஹகீகத்துல் வஹீ பக்கம் 117)

உளப்பூர்வமான அன்புடன் அறிவுரை கூறியவாறு கூறுகின்றார்கள்:

அறிவீனர்களே! இறைவனின் இருப்பு பற்றி முழுமையான உறுதி இல்லாத வரை, அவனுடைய ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? எனவே உறுதியுடன் கூடிய ஏகத்துவம், நபியின் மூலமாகவே கிடைக்க முடியும் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள்.

நமது நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டின் இறைமறுப்பாளர்களுக்கும் மார்க்கமற்றவர்களுக்கும் ஆயிரக்கணக்கான இறையடையாளங்களைக் காட்டி இறையிருப்பை ஏற்றுக் கொள்ள வைத்து விட்டார்கள்..... எதுவரை உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் காண்பதில்லையோ, அதுவரை ஷைத்தான் அவரது உள்ளத்திலிருந்து வெளியேறுவதில்லை என்பதே உண்மை ஆகும். மேலும், உண்மையான ஏகத்துவம் அவரது உள்ளத்தில் நுழைவதுமில்லை. மேலும் அவரால் உறுதியான முறையில் இறையிருப்பை ஒப்புக் கொள்ளவும் முடியாது. மேலும் இந்தத் தூய மற்றும் முழுமையான ஏகத்துவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகவே கிடைக்கிறது. (ரூஹானி கஸாயின் தொகுதி 22 ஹகீகத்துல் வஹீ பக்கம் 180)



## தூய ஏகத்துவத்திற்கு ஞானமிக்க விளக்கம்:

இறைவனின் ஏகத்துவக் கொள்கை இஸ்லாம் மார்க்கத்தின் உயிராகும். மேலும் இஸ்லாத்தில் எந்த வடிவத்தில் எவ்வளவு விளக்கமாக தூய ஏகத்துவம் முன்வைக்கப்பட்டுள்ளதோ அது இஸ்லாத்திற்கு ஒரு தனிச்சிறப்பாகும். அது இஸ்லாத்தை ஏனைய அனைத்து மார்க்கங்களைக் காட்டிலும் தனிச்சிறப்புடையதாகவும் மேலோங்கியிருப்பதாகவும் நிரூபிக்கிறது.

எல்லாவற்றையும் நன்றாக அறிந்தவனும் முழு உலகிற்கும் கற்பிக்கக் கூடியவனுமான அந்த இறைவன், இஸ்லாம் முன்வைக்கும் தூய ஏகத்துவம் குறித்த ஆழிய ஞானத்தையும் புரிதலையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கினான். அவர்கள் நமக்கு மிகப்பெரிய வழிகாட்டியாவார்கள்.

அன்னாருடைய அருளுக்குரிய நாவினால் மீண்டும் ஒருமுறை இஸ்லாம் முன்வைக்கும் தூய ஏகத்துவத்தின் உட்கருத்தை அறிவோம். அன்னார் கூறுகிறார்கள்:

இறைவன் எவருக்கும் மகனுமில்லை. எவரும் அவனுக்கு மகனுமில்லை. ஏனென்றால், அவன் தேவையற்றவன். அவனுக்குத் தந்தையின் தேவையும் இல்லை. மகனின் தேவையும் இல்லை. ஈமானின் அடிப்படையாக இருக்கின்ற இந்த ஏகத்துவத்தைத்தான் திருக்குர்ஆன் கற்றுத் தந்துள்ளது. (லெக்சர் லாஹூர் பக்கம் 13 ரூஹானி கஸாயின் தொகுதி 20)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உண்மையான ஏகத்துவத்தை இந்தச் சொற்களில் எடுத்துரைத்துள்ளார்கள்:

அவன் தனது இருப்பில், பண்புகளில், செயல்களில் மற்றும் ஆற்றல்களில் தனித்தவன் ஆவான். திருக்குர்ஆன் திறந்த ஒரு கதவைத் தவிர அவனைச் சென்றடையக் கூடிய அனைத்துக் கதவுகளும் அடைக்கப்பட்டுள்ளன. (அல் வஸிய்யித் - பக்கம் 17, ரூஹானி கஸாயின் தொகுதி 20)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் என்னவாக இருந்தது? அன்னார் கூறுகிறார்கள்:

ஐரோப்பியா என்ன? ஆசியா என்ன? பூமியின் பல இடங்களில் வசிக்கக் கூடிய அந்த அனைத்து ஆன்மாக்களையும், நல்லியல்பு கொண்டுள்ள அனைவரையும் ஏகத்துவத்தின் பால் ஈர்க்க வேண்டும் மற்றும் தனது அடியார்களை ஒரே மார்க்கத்தில் ஒன்றிணைக்க வேண்டும் என்று இறைவன் விரும்புகிறான். இதுவே இறைவனின் நோக்கமாகும். இதற்காகவே நான் உலகிற்கு அனுப்பப்பட்டுள்ளேன். ஆகவே, நீங்கள் அந்த நோக்கத்தைப் பேணி வாருங்கள். ஆனால், மென்மையுடன் நல்லொழுக்கத்துடன் மற்றும் துஆக்களில் அழுத்தம் கொடுங்கள். (அல் வஸிய்யித் - ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 306-307)

இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிகளைக் கோடிட்டுக் காட்டியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: இறைவனின் இருப்பு மறைவிலும் மறைவாகவும், அப்பாற்பட்டதிலும் அப்பாற்பட்டதாகவும், மிகவும் மறைமுகமாகவும் அமைந்துள்ளது. மேலும் எந்த அறிவும் அவனைக் கண்டறிய முடியாது. இது தொடர்பாக அவனே கூறுகிறான்:

لَا تُدۡرِكُهُ الۡاَبۡصَارُ ۫ وَهُوَ يُدۡرِكُ الۡاَبۡصَارَ ۚ وَهُوَ اللَّطِيۡفُ الۡخَبِيۡرُ

அதாவது, பார்வைகளும் அறிவுகளும் அவனை அடைய முடியாது. அவன் அவற்றின் எல்லையை அறிகிறான். மேலும், அவற்றின் மீது மேலோங்கியிருக்கிறான்.

எனவே வெறும் அறிவினால் அவனது ஏகத்துவத்தைக் கண்டறிவது சாத்தியமற்றது. ஏனென்றால், ஏகத்துவத்தின் உண்மை நிலை என்னவென்றால், எவ்வாறு மனிதன் உலகம்

முழுவதிலுமுள்ள பொய்க் கடவுள்களை விட்டும் விலகி இருக்கின்றானோ, அதாவது எவ்வாறு சிலைகள், மனிதர்கள், சூரியன், சந்திரன் போன்றவற்றை வணங்குவதிலிருந்து தவிர்ந்திருக்கின்றனோ அவ்வாறே ஆன்மா சம்பந்தப்பட்ட பொய்யான கடவுள்களை விட்டும் தவிர்ந்திருக்க வேண்டும். அதாவது தனது ஆன்மிக, பௌதிக ஆற்றல்கள் மீது நம்பிக்கைக் கொள்வதை விட்டும் மேலும் அதன் மூலம் ஆணவம் எனும் துன்பத்தில் சிக்குவதை விட்டும் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். எனவே இந்நிலையில் வெளிப்படையாவது என்னவென்றால், ‘தான்’ என்ற அகந்தையை விட்டு விட்டு தூதரைப் பற்றிப் பிடித்தாலே அன்றி, முழுமையான ஏகத்துவம் கிடைக்க முடியாது. மேலும் எவர் தனது ஏதேனும் ஓர் ஆற்றலை இறைவனுக்கு இணையாகக் கொள்வாரோ, அவர் எவ்வாறு ஓரிறைக் கொள்கை உடையவர் எனப்படுவார்? (ஹகீகத்துல் வஹீ - ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 147-148)

ஓரிறைக் கொள்கையின் கலிமாவில், தம்மை (இறை) அடியார் என்று சாட்சி பகர்வதை ஒரு கட்டாய அங்கமாக ஆக்கி விட்டார்கள்.

திருக்குர்ஆனைப் படித்துப் பாருங்கள். அதுமட்டுமல்ல, நமது நபி (ஸல்) அவர்களை விட அதிகம் உலகில் வேறு ஒரு முழுமை பெற்ற மனிதருடைய முன்னுதாரணம் இல்லை. இனி கியாமத் வரை இருக்கப் போவதுமில்லை. பிறகு பாருங்கள்! ஆற்றல் மிக்க அற்புங்கள் கிடைக்கப் பெற்றும் ஹுஃஸூர் (ஸல்) அவர்கள் எப்பொழுதும் அடியாராகவே இருந்தார்கள். எதுவரை என்றால், ஓரிறைக் கொள்கையின் கலிமாவில், தம்மை (இறை) அடியார் என்று சாட்சிபகர்வதை ஒரு கட்டாய அங்கமாக ஆக்கி விட்டார்கள். அது அல்லாமல் ஒரு முஸ்லிம் முஸ்லிமாகவே ஆக முடியாது. (மல்ஃபூஸாத் புதிய பதிப்பு தொகுதி 1 பக்கம் 74. 1897-ஆம் ஆண்டு ஆண்டு மாநாட்டு அறிக்கை)

ஏகத்துவத்தின் உண்மையை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாவினால் கலிமா ஷஹாதத் சொல்வது மட்டும் ஏகத்துவம் ஆகி விடாது. மாறாக ஏகத்துவம் என்பதன் பொருள், இறைவனுடைய மகத்துவம் நன்றாக மனதில் பதிந்துவிட வேண்டும். மேலும் அதற்கு முன்னிலையில் மற்ற எந்தப் பொருளின் மகத்துவமும் மனதில் இடம்பெறக் கூடாது. தூய இறையிருப்பை மட்டுமே ஒவ்வொரு செயல், அசைவு மற்றும் நிம்மதியின் திரும்பும் இடமாகக் கருத வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் அவன் மீதே நம்பிக்கை கொள்ள வேண்டும். இறைவன் அல்லாத எதன் மீதும் எந்த வகையான பார்வையும் நம்பிக்கையும் ஒருபோதும் இருக்கக் கூடாது. இறையிருப்போடும் பண்புகளோடும் எந்த வகையான இணைவைத்தலையும் ஒருபோதும் மேற்கொள்ளக் கூடாது. (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 230 - ரப்வா பதிப்பு 2003)

(தொடரும்...)

*(16-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி ...)*

திருக்குர்ஆன் கூறுவதாவது, பெண்கள் திரையிட்டுக் கொள்ள வேண்டும். அவர்கள் அந்நிய ஆண்களைப் பார்க்கக் கூடாது. எந்தப் பெண்களுக்கு வெளியே செல்ல வேண்டிய தேவை ஏற்படுகிறதோ அவர்கள் வீட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடையில்லை. அவர்கள் தாராளமாக செல்லலாம். ஆனால், பார்வைக்கான பர்தா அவசியமாகும். (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் பொன்மொழிகள் தொகுதி 1 பக்கம் 405)

### சுதந்திரமான முறையில் அந்நிய பெண்களைப் பார்ப்பதில் உள்ள ஆபத்துகள் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டல்

சுதந்திரமான முறையில் அந்நிய பெண்களைப் பார்த்துக் கொண்டிருப்பதில் உள்ள சாத்தியமான ஆபத்துகள் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:




“...தனது உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருக்க விரும்பக்கூடிய, தீமையிலிருந்து தவிர்ந்திருக்கும் ஒவ்வொருவரும், கருத்திற் கொள்ளாமல், விலங்குகளைப் போன்று விரும்பிய பக்கம் பார்வை உயர்த்தி பார்ப்பது இருக்கக் கூடாது. மாறாக, அவர் இந்தப் பண்பாட்டு வாழ்வில் பார்வையைத் தாழ்த்தி வைத்திருப்பதற்கான பழக்கத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். இது எத்தகைய அருளுக்குரிய பழக்கம் என்றால், இதன் மூலம் அவரது இந்த இயல்பான நிலை ஒரு பெரிய நற்பண்பு வடிவில் வந்து விடும்...” (தஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை), சூரா அந்நூர் தொகுதி 6, பக்கம் 94)

(தொடரும்...)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த காலம் எப்படிப்பட்ட பலவீனமான காலம் என்றால், எந்த காலத்திலாவது பர்தா அணிவதன் பழக்கம் இல்லாதிருந்தாலும் இந்த காலத்தில் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இது கலியுகமாகும். பூமியில் தற்போது குழப்பமும், சோதனையும், மது அருந்துவதும் மேலோங்கி இருக்கிறது. மேலும் உள்ளங்களில் நாத்திகத்தின் சிந்தனைகள் பரவிக் கொண்டிருக்கின்றன. இறைவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவம் உள்ளங்களிலிருந்து வெளியேறி விட்டது. நாவுகளில் எல்லாம் இருக்கின்றன. சொற்பொழிவுகளும் தர்க்க சாஸ்திரமும் நிரம்பி காணப்படுகின்றன. ஆனால் உள்ளம் ஆன்மீகத்திலிருந்து வெற்றிடமாக இருக்கிறது. இப்படிப்பட்ட காலத்தில் நமது அப்பாவி ஆடுகளை ஓநாய்களின் காடுகளில் மேயவிடுவது எப்படி பொருத்தமானதாக இருக்க முடியும்?

(யு.கே. ஜல்ஸா ஸலானா 2015 – லஜ்னா உரையிலிருந்து...)

# ஆன்மா – ஓர் ஆய்வு


திருக்குர்ஆனில் 17:86-வது வசனத்தில், “அவர்கள் உம்மிடம் ஆன்மாவைப் பற்றி வினவுகின்றனர். நீர் (அவர்களிடம்) ஆன்மா என் இறைவனின் கட்டளையால் (படைக்கப்பட்டு) உள்ளது. உங்களுக்கு அது பற்றி மிகக் குறைந்த அளவே அறிவு கொடுக்கப்பட்டுள்ளது எனக் கூறுவீராக” என்று ஆன்மா பற்றிக் கூறப்பட்டுள்ளது.

எனவேதான் பல மொழிபெயர்ப்பாளர்கள், இந்த வசனத்தில் வரும் رُوْحٌ என்பதற்கு உயிர் எனப் பொருள் கொண்டுள்ளனர். உயிர் வேறு, ஆன்மா வேறு என்பதற்குத் திருக்குர்ஆன் 23:15 வசனத்தைக் காட்டலாம். அதில் மனிதப் படைப்பு பற்றிக் கூறும்போது விந்து, சதைக்கட்டி, எலும்புகளுக்கு சதையை அணிவித்து என்று கூறி, ‘பின்னர் அதனை மற்றொரு படைப்பாக வளர்ச்சியடையச் செய்தோம்’ என்று கூறுகிறான். இதில் வரும் மற்றொரு படைப்பு என்பது ‘ஆன்மா’ ஆகும். மனிதப் படைப்பில் உயிர் என ஒன்று இருந்ததினால்தான் விந்து, சதைக்கட்டி, எலும்பு என வளர்ச்சியடைய முடிகிறது. எனவே மற்றொரு படைப்பு என்பது மனிதனுக்கு மட்டும் உரிய, வேறு எந்த உயிரினத்துக்கும் இல்லாத ‘ஆன்மா’ ஆகும். 32:10-ல் ‘ஆவியை ஊதினான்’ என்பது ஆன்மாவைக் குறிக்கும்.

திருக்குர்ஆன் 39:43-வது வசனத்தில், ‘அல்லாஹ் உயிர்களை அவற்றின் மரணத்தின் போதும், மரணமடையாத -வற்றை அவற்றின் தூக்கத்தின் போதும் கைப்பற்றுகிறான். எதற்கு மரணத்தை விதித்து விட்டானோ அதை நிறுத்தி வைத்துக் கொள்கிறான்’ என்று கூறுகிறான். இதில் வரும் نَفْسٌ எனும் சொல்லுக்கு உயிர் என்பதை விட ஆன்மா என பொருள் கொள்வதே பொருத்தமானதாகும். ஏனென்றால் உயிர்களை மரணத்தின்போது கைப்பற்றுகிறான் என்பது சரி என்று வைத்துக் கொண்டால், தூக்கத்தின்போது உயிரைக் கைப்பற்றுகிறான் என்றால், தூக்கத்தில்தான் உயிர் இருக்கிறதே? எனவே தூக்கத்தில் உயிர் அல்லாத ஒன்று கைப்பற்றப்படுகிறது. அதுதான் ஆன்மா.

திருக்குர்ஆன் 80:22-இல் ‘அவன் அவனை மரணமடையச் செய்து அவனை ஒரு கப்ரில் அடக்குகிறான்’ என்று கூறுகிறான். இதில் இறைவன், தான் கைப்பற்றிய ஆன்மாக்களை அடக்குகிறான். இந்த வசனத்தில் வரும் கப்ரை மொழிபெயர்ப்பாளர்கள் பலரும் மண்ணறை, கல்லறை என்று உலகில் பிணங்களைப் புதைக்கும் கப்ர் என்று தவறாகப் பொருள் கொண்டுள்ளனர்.

திருக்குர்ஆன் 22:8-இல் ‘நிச்சயமாக அல்லாஹ் கப்ர்களில் உள்ளவர்களை மீண்டும் எழுப்புவான்’ என்று கூறுவது பிணங்கள் புதைக்கப்பட்ட கப்ர் அன்று. அது ஆன்மாக்கள் வைக்கப்பட்டுள்ள கப்ர் ஆகும். அதிலுள்ள ஆன்மாக்களைத்தான் அல்லாஹ் எழுப்புவான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இஸ்ராவின் போதும், மிஃராஜின் போதும் சென்றது அவர்களின் உடல் அன்று; அவர்களின் ஆன்மா ஆகும். எனவேதான் இஸ்ராவின் பயணத்தை 17:61-இல், ‘நாம் உமக்குக் காட்டிய ஆன்மிகக் காட்சி’ رُءْيَا என்று கூறுகிறான். இவ்வாறே மிஃராஜில் 53:12-இல், ‘அந்த உள்ளம், தான் கண்டதைக் குறித்துப் பொய்யுரைக்கவில்லை’ என்று கூறுகிறான். மிஃராஜில் கண்டது உள்ளம் ஆகும். புறக்கண் அன்று; அகக்கண்.



மிஃராஜ் பயணத்தின் இறுதியில் அல்லாஹ்வின் பெயர் கூறி இறங்குங்கள் என்று ஜிப்ரீல் கூற, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புனிதப் பள்ளியில் விழித்தெழுந்தார்கள் என்று (புகாரி எண். 7517) நபிமொழியில் வருகிறது.

எனவே மிஃராஜ் பயணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தூக்கத்தின் போது புறப்பட்டுச் சென்றதையும், பயணம் முடிந்தவுடன் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்த -தையும் தெளிவாகக் குறிப்பிடுவதால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மாவே மிஃராஜில் சென்று வந்தது என்றும், இது ஓர் ஆன்மிகக் காட்சி என்றும் விளங்குகிறது.

இந்த ஆன்மாவை ஹஸ்ரத் அஹ்மது (அலை) மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். 1) நஃப்ஸே அம்மாரா 2) நஃப்ஸே லவ்வாமா 3) நஃப்ஸே முத்மயின்னா. திருக்குர்ஆன் 12:54-இல் தீமையைத் தூண்டும் ஆன்மா (அம்மாரா) என்றும், 75:3-இல் கடிந்து கொள்ளும் ஆன்மா (லவ்வாமா) என்றும், 89:28-இல் நிம்மதியடைந்த ஆன்மா (முத்மயின்னா) என்றும் மூன்று வகைகளாகப் பிரிக்கின்றார்கள்.

இந்த மூன்று ஆன்மாக்களுக்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் திருக்குர்ஆனிலிருந்து மூன்று கூட்டத்தினரை எடுத்துக் கூறுகிறார்கள். 1) தீமையைத் தூண்டும் ஆன்மாவுக்கு நூஹ் நபியின் மனைவியையும், லூத் நபியின் மனைவியையும் உதாரணங்களாகக் கூறுகிறார்கள். 2) கடிந்து கொள்ளும் ஆன்மாவுக்கு ஃபிர்அவ்னின் மனைவியை உதாரணமாகக் கூறுகிறார்கள். 3) அமைதி அடைந்த ஆன்மாவுக்கு மர்யம் (அலை) அவர்களை உதாரணமாகக் கூறுகிறார்கள்.

திருக்குர்ஆனில் 91-வது அதிகாரம் அஷ்ஷம்ஸ் ஆகும். அது ஆன்மாவைப் பற்றிக் கூறும் ஓர் அதிகாரம் ஆகும். அதில் 1-9 வசனங்களில் ஆன்மாவிடம் காணப்பட வேண்டிய பண்புகளைக் கூறுகிறான். இப்பண்புகளைக் கொண்ட ஆன்மாவே முழுமையான ஆன்மா என்று அல்லாஹ் கூறுகிறான். பாவத்தில் மூழ்கிய ஆன்மாவுக்கு 91:12 முதல் 16 வரையுள்ள வசனங்களில் கூறப்பட்ட ஸமூது இனத்தினரையும் அவர்கள் அல்லாஹ்வின் பெண் ஒட்டகத்தின் கால் நரம்பைத் துண்டித்ததையும் கூறுகிறான். இதில் அல்லாஹ்வின் பெண் ஒட்டகமாகிய ஆன்மாவை அம்மக்கள் காயப்படுத்தி விட்டதாகவும் கூறுகிறான். இது பற்றிய முழுமையான விளக்கத்தை, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எழுதிய, ‘இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்’ எனும் நூல் பக்கம் 164-இல் காண்க.

ஆன்மாக்கள் தான் சொர்க்கத்திலும் நரகத்திலும் நுழையும்; உடல் அன்று. திருக்குர்ஆனில் 89:28-இல் நிம்மதி அடைந்த ஆன்மா என்று அதனை இறைவன் அழைத்து, நீ சொர்க்கத்தில் நுழைந்து விடு (89:31) என்று கூறும் வசனம் விளக்குகிறது. திருக்குர்ஆன் 17:9 வசனம், நிராகரிப்பவர் -களுக்கு நரகம் சிறைக்கூடமாகும் என்று கூறப்பட்டுள்ளது. சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்குரிய தண்டனைக் காலம் முடிந்ததும் அவர்கள் அதிலிருந்து வெளியேறி விடுவர். எனவே நரகம் தற்காலிகமானதேயாகும்.

ஆன்மாக்களுக்கு மரணம் இல்லை. அது இறைவன் கைவசம் சென்று விடுகிறது. ஆனால் மொழிபெயர்ப்பாளர்கள் சிலர் 3:185 வசனத்திற்கு, எல்லா ஆன்மாக்களும் மரணத்தைச் சுவைக்கும் என்று ந.்ஃப்ஸ் என்பதற்கு ஆன்மா என்று பொருள் கூறியுள்ளனர். எல்லா மனிதர்களும் மரணத்தை சுவைப்பர் என்றுதான் பொருள் கூற வேண்டும்.

**(A.P.Y. அப்துல் காதிர்)**

*(10-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி ...)*

29. சோலா என்பதைப் பற்றி கூறுக:

குருநானக் அவர்களின் புனித ஆடையின் ்பெயர் :சோலா எனப்படும். இதில் திருக்குர்ஆன் வசனங்கள் மற்றும் இஸ்லாமியரின் புனித கலிமா ஆகியன பொறிக்கப் -பட்டுள்ளன.

30. சோலாவில் என்ன வசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன என்பதைச் சரி பார்க்க ஹஸ்ரத் அஹமத் (அலை) அனுப்பிய தோழர்கள் யார் யார்?

1) மிர்ஸா யாகூப் பேக் (ரலி)
2) முன்ஜீ தாஜுத்தீன் (ரலி)
3) காஜா கமாலுத்தீன் (ரலி)
4) மியான் அப்துர் ரஹ்மான் (ரலி)

ஆகிய நால்வரும் சென்றனர்.

31. மேற்சொன்ன குழு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் தெரிவித்தது என்ன?

திருக்குர்ஆனின் 2:256, 3:20 ஆகிய வசனங்களும் 112-வது அத்தியாயமும் புனித கலிமா ஆகியனவும் அந்த ஆடையில் பொறிக்கப்பட்டிருந்ததாகக் கூறினர்.

32. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அந்த ஆடையை எப்போது நேரில் சென்று பார்த்தார்கள்?

1895 செப்டம்பர் 30-ஆம் தேதி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் டேரா பாபா நானக்கில் நேரில்் சென்று பார்வையிட்டார்கள்.

33. இந்துக்கள் குருநானக் பற்றி எழுப்பிய ஆட்சேபனை -களுக்கு பதிலளிக்கும் நூல் எது?

ஸத் பச்சன் என்பதாகும்.

34. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வருகை குறித்து சீக்கிய கிரந்தங்கள் எவ்வாறு முன்னறிவிக்கின்றன?

1) சீக்கியர்களின் புனித நூலான பாய்பாலாவுடைய ஜன சக்தியில் 272-ஆம் பக்கத்தில் பின்வரும் வரிகள் காணப்படுகின்றன:

முகலாயர் ஆட்சி 1578-1897-ஆனது முடிவடையும். அதன் பின்பு சீர்திருத்தவாதி தோன்றுவார்.

2) ஜனசக்தி எனும் நூலில் 527-வது பக்கத்தில் இவ்வாறு காணப்படுகிறது:

“ஒரு காலம் வரும். அப்போது சன்யாசிகள் பிரம்மச்சாரிகள் மற்றும் பிராமணர்கள் போன்றவர்கள் தம்மை குருக்கள் என்று பிரகடனப்படுத்துவர். அதன் பின்பு ஒரு முழுமையான போதகர் இவை அனைத்தையும் அழித்து விடுவார். இதுவே வானத்தின் தீர்ப்பாகும”.

3) குர்தாஸ்பூர் மாவட்டத்தில் பட்டாலா வட்டத்தில் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி தோன்றுவார் என்று சீக்கிய ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

35. பாபா நானக் ஒரு முஸ்லிம் புனிதரே என்று எவ்வாறு கூற முடியும்?

பாபா நானக் இடைவிடாது முஸ்லிம் புனிதர்களுடன் வசித்து வந்துள்ளார். ஆத்மிகத் தூய்மைக்காக முஸ்லிம்களால் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்ட சில்லாக்களில் கலந்து கொண்டுள்ளார்.

இஸ்லாமியர்களுடைய கூட்டுத் தொழுகைகளில் பங்கு பெற்றுள்ளார். மக்காவிற்குப் புனித யாத்திரை சென்றுள்ளார். பாக்தாத் போன்ற இஸ்லாமிய புனித நகரங்களுக்குச் சென்றுள்ளார். இவையே இவர் ஒரு இஸ்லாமியராக வாழ்ந்துள்ளார் என்பதற்கான அடையாளங்களாகும்.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 28.12.1927–ல் ஆண்டு மாநாட்டின்போது நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து....**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வந்த இல்ஹாம்களில் ஒன்று, “உலகிற்கு ஓர் எச்சரிப்பாளர் வந்தார். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான். மேலும் வலுவான தாக்குதல்கள் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்திக் காட்டுவான்” என்பதாகும். இந்த இல்ஹாமை ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் எப்போது வெளியிட்டார்கள் என்றால், அந்த சமயத்தில் அவர்கள் வாழ்ந்த இடத்திலேயே அவர்களைப் பற்றி எவரும் அறிந்திருக்கவில்லை. பாருங்கள்! இதில் எவ்வளவு மகத்தான முன்னறிவிப்பு செய்யப்பட்டிருக்கின்றது. ஒரு மனிதன் தனது முயற்சியால் இத்தகைய செய்தியைத் தெரிவிக்க முடியுமா? இந்த இல்ஹாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து நியமிக்கப்படுவதற்கு முன்னர் வந்ததாகும்.

இந்த முன்னறிவிப்பில் முதலாவதாக, ‘அவர்கள் உயிரோடு இருப்பார்கள். இறைவன் புறமிருந்து தாம் நியமிக்கப்பட்டதாக வாதம் செய்வார்கள்’ என்ற முன்னறிவிப்பு இருக்கின்றது. இரண்டாவதாக, ‘இதில் அவர்கள் வாதம் செய்யும்போது உலகம் அவர்களை மறுத்து விடும்’ என்ற முன்னறிவிப்பு இருக்கின்றது. மூன்றாவதாக, ‘இதில் உலகம் அவர்களை சாதாரணமாக எதிர்க்காது. மாறாக எல்லா வகையான தாக்குதல்களும் அவர்கள் மீது தொடுக்கப்படும்’ என்ற முன்னறிவிப்பு இருக்கின்றது. நான்காவதாக, ‘இதில் இறைவன் புறமிருந்து அந்தத் தாக்குதல்கள் முறியடிக்கப்படும் என்றும் உலகத்தின் மீது தண்டனை இறங்கும்’ என்றும் முன்னறிவிப்பு இருக்கின்றது. ஐந்தாவதாக, ‘இதில் இறுதியில் அவர்களது உண்மை வெளிப்படும்’ என்ற முன்னறிவிப்பு இருக்கின்றது.

# வாகிஃபீனே நவ் மற்றும் வாகிஃபாதே நவ் இஜ்திமாவிற்காக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் தூதுச்செய்தி

தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது

இஸ்லாமாபாத் யு.கே
MA 28-10-2023

காதியானைச் சேர்ந்த அன்பிற்குரிய வாகி.்.பீனே நவ் மற்றும் வாகி.்.பாதே நவ் ஆகியோருக்கு,

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهٗ

உங்களுடைய 25-ஆவது வருடாந்திர இஜ்திமாவை நடத்துவதற்கான நல்வாய்ப்பு உங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது - அல்ஹம்துலில்லாஹ்! இதை எல்லா வகையிலும் வெற்றிக்குரியதாகவும், அருளுக்குரியதாகவும் அல்லாஹ் ஆக்குவனாக. ஆமீன்!

இச்சந்தர்ப்பத்தில் தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. நான் உங்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் சில அவசியமான அறிவுரைகளை செய்ய விரும்புகிறேன்.

நீங்கள் அனைவரும் அறிந்தது போன்று, வக்.்.பே நவ் திட்டம் என்பது பெற்றோர்கள் இத்திட்டத்தின் கீழ் தம் ஆண் பிள்ளைகளையும், பெண் பிள்ளைகளையும் அவர்களின் பிறப்பிற்கு முன்பே இறைவனுடைய மார்க்கத்திற்காக அர்ப்பணிப்பதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்ட பிறகு ஓர் அஹ்மதிக்கு அனைத்தையும் விட முதன்மையான கடமை என்னவென்றால், அவர் தம் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும். நீங்களோ உங்கள் வாழ்க்கையை இறைவனுக்கு முன்னால் அர்ப்பணித்துள்ளீர்கள். எனவே உங்கள் வாழ்க்கையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைக்கேற்ப அமைத்துக் கொள்வது உங்களின் முதன்மையான கடமையாக உள்ளது. நினைவில் கொள்ளுங்கள்! நீங்கள் எப்பொழுதும் உங்கள் தொழுகைகளைப் பாதுகாக்க வேண்டும். திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கமும் முழுமையாக முயற்சி செய்யுங்கள். திருக்குர்ஆனை ஆழ்ந்து ஆராயுங்கள். மேலும் அதன் போதனைகளைப் புரிவதற்கு முயற்சி செய்யுங்கள்.

வாகி.்.பாத்தே நவ் (பெண் பிள்ளைகளுக்கு) எனது அறிவுரை என்னவென்றால், நம்பிக்கை கொண்ட பெண்கள் தம் வெட்கத்தைப் பாதுகாக்க வேண்டும்; எப்பொழுதும் தம் பர்தாவை பேண வேண்டும் என அல்லாஹ் கூறியுள்ளான். எனவே அஹ்மதி பெண் பிள்ளைகள் பர்தா விஷயத்தில் எந்தவொரு தாழ்வு மனப்பான்மையிலும் சிக்கி விடக்கூடாது. உலகில் எவ்வளவோ நோய்கள் உள்ளன. மக்கள் மார்க்கத்தை விட்டு விலகிச் செல்கிறார்கள். இறைவனுக்காக எழுந்து நின்று விடுங்கள். இது உங்களுடைய பொறுப்பாகும். ஒவ்வோர் உலகியல் விஷயத்தையும் தம் சிந்தனையிலிருந்து அகற்றி விடுவதற்கு எப்பொழுதும் முயற்சி செய்யுங்கள். உலகப் பொலிவுகளைக் கண்டு ஈர்க்கப்பட்டு விட வேண்டாம். மாறாக இஸ்லாமிய போதனைக்கேற்ப தம் வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள்.

வாக்கி.்.பீனே நவ் (ஆண் பிள்ளைகளுக்கு) எனது அறிவுரை என்னவென்றால், நீங்கள் உங்கள் கொள்கை, உங்கள் செயல் மற்றும் உங்களது நற்குணங்களில் சிறந்தவராக ஆகிக் காட்டுங்கள். நீங்கள் இஸ்லாமிய போதனைக்கேற்ப வாழ்க்கையை வாழக்கூடியவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் எப்பொழுதும் இறை நேசத்தைப் பெறுவதில் மூழ்கி விடுங்கள். ஏனென்றால் இவ்வாறே நீங்கள் உங்களது பைஅத்தின் உரிமையைச் செலுத்த முடியும். நீங்கள் எல்லாவித தியாகங்களுக்காகவும் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். இறைவனுடன் எப்பொழுதும் நன்றி உணர்வைக் கொண்டிருப்பவர்களாக இருக்க வேண்டும். உங்களுடைய உறுதிமொழி (மேற்கூறப்பட்ட) இவ்விஷயங்களையும் எதிர்பார்க்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருக்குர்ஆனுடைய ஒளியில் நன்றி உணர்வின் கருத்தை எடுத்துரைக்கும்போது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் உதாரணத்தை கொடுத்துள்ளார்கள். எனவே உங்களுடைய உறுதிமொழியும்




இவ்வாறே நன்றியுணர்வை வேண்டுகிறது. நீங்கள் உங்களுடைய இறுதி மூச்சு வரை இந்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும். வக்.்.பே நவ்வில் உள்ள ஒவ்வொருவரும் தமது உறுதிமொழியை நிறைவேற்றக் கூடியவராக ஆகி விடுவார் என்றால் நிச்சயமாக ஒரு மாபெரும் புரட்சி உருவாகி விடும்.

அனைத்து வாகி.்.பீனே நவ் மற்றும் வாகி.்.பாத்தே நவ் உடைய பொறுப்பு என்னவென்றால், அவர்களது தாய் தந்தையர் அவர்களுடைய பிறப்புக்கு முன்னர் செய்த உறுதிமொழியைக் காப்பாற்றுங்கள். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளியுங்கள். இஸ்லாத்திற்குத் தொண்டாற்றுவதை வாழ்வின் குறிக்கோளாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்களுடைய பொறுப்புகளை நிறைவேற்றக் கூடியவர்களாகவும், உலகில் உண்மையான ஆன்மிகப் புரட்சியைக் கொண்டு வரக் கூடியவர்களாகவும் அல்லாஹ் ஆக்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்
கையொப்பம்
மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ்

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam